பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 28 சித்திரை 23 ஜ-ஆகிர் 19 இதழ் 85
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 5-5-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-5-5
PERIODICALS DIVISION
LIBRARY

# 85000 குடும்பங்களுக்கு 5 லட்சம் ஏக்கர் காணி! இலவசமாகக் கிடைக்கிறது

(கொழும்பு)

**பிரதான குடியேற்றத்திட்டங்களில் குடியேறி, விவசாயத்துறையில் ஈடுபட்டிருக்கும் சகலருக்கும், காணி உறுதிப்பத்திரங்கள் எவ்வித கட்டணமுமின்றி இலவசமாக வழங்கப்படவிருக்கிறது! இதுசம்பந்தமான பத்திரங்களை அரசாங்க அதிபர்கள் வழங்குவார்கள்.**

இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி, அம்பாறை, பொலன்நறுவ, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலுள்ள பிரதான குடியேற்றத் திட்டங்களில் மொத்தம் ஐந்து லட்சம் ஏக்கர் காணிகளில், எண்பத்தையாயிரம் குடும்பத்தினர் குடியிருக்கின்றனர் என்றும், அவர்கள் விவசாயத் தொழிலையே அதிகமாக மேற்கொள்கின்றனர் என்றும் தெரிய வந்துள்ளது.

இவர்களில் அதிகமானோர் இக்காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்களாகும்.

அரசாங்கத்தின் புதிய திட்டத்திற்கிணங்க தேசிய உணவு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்திவரும் இவர்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் எவ்வித கட்டணமுமின்றி இலவசமாகவே வழங்கப்படவிருக்கிறது.

## நாளை மறுதினம் ஆனமடுவ இடைத்தேர்தல்

### தேர்தல் பிரச்சாரம் இன்றுடன்முடிவு

(கொழும்பு)

ஆனமடுவ இடைத் தேர்தல் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறுகிறது.

சகல அரசியல் கட்சிகளினதும் தேர்தல் பிரசாரங்கள் இன்று நள்ளிரவுடன் முடிவடைகிறது.

ஆனமடுவ தொகுதியில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 43,416 ஆகும். இது கடந்த தேர்தலிலும் பார்க்க 4,581 அதிகமாகும். தேர்தல் முடிவுகள் வியாழக்கிழமை அதிகாலை வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

முதலாந் தவணை விடுமுறைக்குப்பின்னர் இன்று பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

ஆனமடுவ தொகுதியிலும் பாடசாலைகள் எட்டாந் திகதிதான் ஆரம்பமாகும். இங்கு 7-ந் திகதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

## 6 மாதங்கள்

(தெஹ்ரான்)

அமெரிக்க அதிகாரிகள் பணயக் கைதிகளாக சிறை வைக்கப்பட்டு நேற்றுடன் 6 மாதங்கள் முடிவடைந்தன.

## தேர்தல் பிரசாரம் நடத்த இந்திராகாந்தி

### 12-ல் தமிழகம் விஜயம்

(சென்னை)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இம் மாதம் பன்னிரண்டாந் திகதி சென்னைக்கு விஜயம் செய்கின்றார்.

இரண்டு தினங்கள் தங்கியிருக்கும் அவர், தி.மு.க., இந்திரா காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களுக்காகத் தேர்தல் பிரச்சாரம் பொருட்டு தமிழ்நாடு பூராவும் சூறாவளிச் சுற்றுலாவொன்றை மேற்கொள்வார்.

## தி.மு.க., அ.தி.மு.க.வில் போட்டி வேட்பாளர்!

(சென்னை)

அதிகாரபூர்வமான வேட்பாளர்களுக்கு எதிராக போட்டி வேட்பாளர்கள் தங்களது மனுக்களைத் தாக்கல்செய்திருப்பது தி.மு.கழகத்துக்கும் அ.இ.அ.தி.மு.கழகத்துக்கும் பெரும் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.

தி.மு.க. தலைவர் திரு. மு.கருணாநிதி நேற்று விடுத்த கோரிக்கையில், கழகத்தின் சார்பில் அதிகாரபூர்வமாக வேட்புமனு தாக்கல்செய்தவர்களைவிட, போட்டியாகவேட்புமனு தாக்கல் செய்தவர்கள் அனைவரும் தங்களது மனுக்களை வாபஸ்பெறவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதே மாதிரியான கோரிக்கையை அ.இ.அ.தி.மு.கழகமும் வெளியிட்டுள்ளது.

இதேநேரத்தில் தமிழகத்தில் இந்திரா காங்கிரஸின் வேட்பாளர்கள் சிலர் மாற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தோனேஷியாவில் கரைசேர்ந்த இலங்கை மீனவர் இருவர் தாயகம் வந்து சேர்ந்தனர்

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் 111 நாட்களாகத் தத்தளித்து இந்தோனேசிய மீனவர்களால் காப்பாற்றப்பட்ட இரண்டு மீனவர்களும் நேற்றுக்காலை இந்தோனேஷிய விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

இவர்களை வரவேற்க விமான நிலையத்தில் காத்திருந்த உறவினர்கள் இவர்கள் விமானநிலையத்திலிருந்து வெளியே வந்தபோது கட்டித்தழுவி வரவேற்றனர். தமக்கு ஏற்பட்ட சோகக் கதையை இருவரும் கூறிய போது எல்லோரும் சோகமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

சுனில், சிறில் ஆகிய பிரஸ்தாப இளைஞர்கள் இருவரும் இறந்துவிட்டதாகவே இவர்களது உறவினர்கள் நேற்று முன்தினம்வரை நம்பியிருந்தனர்.

தம்முடன்வந்திருந்த நிமால் குணவர்த்தன என்ற இளைஞர் தாகம் தாங்காது என்ஜின் ஒயிலைக் குடித்ததாகவும் அதுவே அவரது உயிரைக் குடித்துவிட்டதாகவும் கண்களில் நீர்ததும்பக் கூறியவர்கள், தாம் கடல்நீரையும், பச்சை மீன்களையுமே உண்டதாகக் கூறினார்கள். (கு)

## தலாய்லாமா திபெத் திரும்புவார்

(பீகிங்)

திபெத்தின் முன்னள் தலைவர் தலாய்லாமா, மீண்டும் திபெத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தலாய் லாமாவின் பிரதிநிதிகள் ஐவர் கொண்டகோஷ்டியினர் திபெத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தனர். இவர்களிடம் சீனத் தலைவர்கள் தெரிவிக்கையில், தலாய்லாமா திபெத் திரும்பினால் நிச்சயம் வரவேற்கப்படுவார் என்று உறுதிதெரிவித்தனர்.

1959ல் திபெத்திலிருந்து வெளியேறிய தலாஸ்லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்து, சுதந்திர திபெத் கோரிக்கையை எழுப்பியிருந்தார்.

அண்மையில் அவர் பத்திரிகை ஒன்றுக்கு அளித்திருந்த பேட்டியில், சுதந்திர திபெத் யோசனையை தாம் கைவிட்டு விட்டதாகவும், திபெத்தில் சுதந்திரமான ஆட்சி நடைபெறும் பட்சத்தில் அங்கு திரும்ப தாம் விரும்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

## பரீத் நஸீர் சாதனை ஏற்படுத்தினர்!

(வவனியா)

வவனியா நகரசபை மைதானத்தில் ஜனாப் பரீத் நஸீர் 59 மணி 15 நிமிடங்கள் தொடர்ந்து கைதட்டி, நடனமாடி புதிய உலக சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.

வவனியா நகரசபைத் தலைவர் திரு. ஐ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இச் சாதனை முயற்சியை வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பைச் சேர்ந்த திரு. புபுது சரத்பெரேரா தொடர்ந்து 41 மணித்தியாலங்கள் கைதட்டி நடனமாடி முன்னர் புதிய சாதனையொன்றை நிலைநாட்டியிருந்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி குடியேற்றத் திட்டத்துக்கு குழாய் நீர் வசதி!

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பால்சேகரிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க்கிணறு வெற்றியளித்துள்ளதால் இக்கிணற்றிலிருந்து பெறப்படும் நீரில் ஒருபகுதியை திருநெல்வேலி குடியேற்றத்திட்டத்திற்கு குழாய்மூலம் வழங்க மாவட்டஅமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நீண்டகாலமாக இத் திட்டத்தில் குடிநீரின்றி அவதியுற்ற மக்கள், யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. செள தொண்டமான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும்போது ஆரம்பித்து வைப்பார்.

## அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்: டெக்ஸஸில் கெனடி தோல்வி கார்ட்டருக்கு அதிகவாய்ப்பு

(டெக்ஸாஸ்)

டெக்ஸாஸ் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பூர்வாங்கத் தேர்தலில் ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர் பெருவெற்றி ஈட்டியிருப்பதன் மூலம், அமெரிக்க ஜனாதிபதி [illegible] பாளராக நியமனம்பெறும் வாய்ப்பு இப்பொழுது திரு. ஜிம்மிகார்ட்டருக்கு கிடைத்துள்ளது.

இம்மாநிலத்தில், செனட்டர் எட்வேர்ட் கெனடி, திரு. ஜிம்மி கார்ட்டரிடம் படுதோல்வி கண்டுள்ளார். மசாசூவட்ஸ்மாநிலத்திலும் கார்ட்டரிடம் எட்வேர்ட் கெனடி தோல்வி கண்டது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக்கட்சி அபேட்சகராக போட்டியிட முன்னள் கலிபோர்னியா கவர்னர் திரு. றீஜன்ட் தகுதி பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

எமது ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு சிப்பந்திகள் (விற்பனையாளர்) தேவை. நல்லொழுக்கமுள்ள, வேலை செய்ய ஆர்வமுள்ள இளைஞர்கள் சான்றிதழ்களுடனும், நற்சாட்சிப் பத்திரங்களுடனும் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 5654

கல்லூரி ஆசிரியருக்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் நல்ல சூழலில் அறை தேவை. உணவுடன் கூடிய வசதி விரும்பப்படும். விளம்பர இல. 5643, மே/பா ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5643

### விற்பனைக்கு

100 இலாச்சம் நெற்பயிர்ச் செய்கை "புன்னர்பத்தல் காணி" பொன்னாலையில் விற்பனைக்குண்டு. வாங்க விரும்பும் ஆகக்கூடிய விலையைக் குறிப்பிட்டு கடித மூலம் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல: 5645 C/O ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 5645

### கல்வி

ஜுலை மாதம் முதல் வாரம் நடைபெற இருக்கும் லண்டன் பிற்றன் பரீட்சைக்கு மே மாதம் 14-ந் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஸ்ரீமீனாட்சி கமர்ஷல் கல்லூரி, 55, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 5648

## 100 வீடுகள் தெரிவு

(நெல்லியடி)

துன்னாலை தெற்கு கிராம சேவகர் பிரிவில் குடும்ப நல சுகாதாரக்கல்வி செயற்றிட்டத்தைப் பரீட்சார்த்தமாக அமுல் செய்வதற்காக 100 வீடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி தெரிவு செய்யப்பட்ட நூறு வீட்டுக்காரரைக் கொண்ட செயற்குழுவொன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. நெல்லியடிப் பட்டின பிரதேச சுகாதாரப் பரிசோதகர் திரு எ. றுபேர்ட் மேற்படி செயற்குழுவை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இச்செயற் குழுவின் முயற்சியின் பிரகாரம் மிந்திகல் வெளியிலுள்ள பொதுக் கிணறு ஒன்று சுற்றிவரக் கற்களால் கட்டப்பட்டுள்ளதுடன் துன்னாலை தெற்கு பகுதியில் சிறுவர் பல கூடங்கள் சுமார் ஏழும் நிறுவப்பட்டுள்ளன.

துன்னாலை தெற்கிலுள்ள படித்த வாலிபர்கள் மேற்படி வேலைகளைப் பிரபல சமூகசேவையாளர் திரு. எஸ். பெரியதம்பி தலைமையில் சிரமதானம் மூலம் செய்திருந்தார்கள்.

## 'கண்டதையும் 'கேட்டதையும் கதையாக வடித்துள்ளார்'

### குருதிமலை ஆசிரியருக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

மலையகத் தோட்டத் தொழிலாளர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள், அவர்களுடைய இருப்பிடம் எவ்வாறு பறிக்கப்படுகிறது. அன்றாடம் வாழ்க்கைக்காக அவர்கள் படும் கஷ்டங்கள், அவற்றில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள அவர்கள் எடுக்கும் முயற்சி போன்றவற்றை மையமாக வைத்த 'குருதிமலை' நாவல் எழுதப்பட்டுள்ளது என்று நடந்த சனிக்கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 'குருதிமலை' நூல் அறிமுக விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு என். சுப்பிரமணிய ஐயர் கூறினார்.

யாழ். இலக்கிய வட்டத்தால் நடாத்தப்பட்ட இந்நூல் அறிமுக விழா திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) தலைமையில் நடைபெற்றது.

திரு. ஞானசேகரனால் எழுதப்பட்ட மேற்படி நூல் வெளியீட்டு விழாவில் திரு செங்கையாழியன், திரு டொமினிக்ஜீவா ஆகியோரும் ஆய்வுரை நிகழ்த்தினர்.

திரு சுப்பிரமணிய ஐயர் தொடர்ந்து ஆய்வுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

நூலாசிரியர் திரு. ஞானசேகரனால் ஏற்கனவே வெளியிடப்பட்ட காலதரிசனம், புதிய சுவடுகள் ஆகிய நூல்களில்தான் பிறந்து வளர்ந்த, சொந்த மண்ணைப்பற்றியும் அதில்தான் பிறந்தநாள் முதல் கண்ட, அனுபவித்த உண்மைகளைப்பற்றியும் தெளிவாக எழுதியுள்ளார். 'குருதிமலை' இதற்குச் சற்றுப் புறம்பான முறையில்தான் கண்டதையும் கேட்டதையும் வைத்து சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ளது.

"குருதிமலை" நாவலில் தோட்டத் தொழிலாளர்கள் அன்றாடம் தமது வாழ்வுக்காகப்படும் கஷ்டங்களையும், அவர்களை நசுக்கி வாழும் சிறு முதலாளி, கிராமசேவகர், கங்காணிமார் ஆகியோரைப்பற்றியும் மிகவும் திறமையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. வெள்ளையர்களின் கையில் தோட்டங்கள் இருந்தபோது தோட்டத்துரைமார் சிற்றரசர்களாக இருந்ததைப்பற்றியும், தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டபின் தோட்டத்துரைமாரின் செல்வாக்குக் குறைந்து அரசாங்க ஆதரவாளர்களின் கை வலுத்ததைப் பற்றியும் அதனால் லாபத்தில் இயங்கி வந்த தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்கிவந்ததையும் அதைத் தட்டிக்கேட்க முடியாது அரசியல்வாதிகளின் கையாட்களுக்குப் பயந்து வாழ்ந்துவரும் தோட்டத்துரைமாரைப்பற்றியும் கனகச்சிதமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டால் தமது வாழ்வு செழிக்கும்; நாமும் ஏனைய தொழிலாளர்களைப் போல் வாழலாம் என மனப்பால் குடித்த அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள், தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டபின் தங்களின் நிலைமை மேலும் மோசமடைந்து பலவகையிலும் நசுக்கப்படுவதையும் உணர்ந்து வேலை போராட்டத்தில் குதிக்க நேர்ந்ததையும் சிறப்பாக சித்தரிக்கின்றார்.

முதலாளியும் அவனது சகாக்களும் எவ்வாறு கைது செய்யப்பட்டனர் தொழிலாளர் போராட்டம் எவ்வாறு வென்றது தோட்டத்தொழிலாளர்களின் பிரச்னைகள் எவ்வாறு தீர்க்கப்பட்டன என்பது பற்றி நாவலாசிரியர் எழுதத் தவறி விட்டார். இன்னும் சிறிது விரிவாக எழுதியிருந்தால் அவரால் எழுதப்பட்ட குருதிமலை ஒரு முழுமையான நாவலாகவே மாறியிருக்கும்.

திரு செங்கை ஆழியான் ஆய்வுரை நிகழ்த்திய போது இந்த நாட்டில் எழுத்தாளர்களுக்கு இருக்கும் தடைகளைப் பற்றிவிபரித்தார்.

எழுத்தாளர்கள் தாம் எழுதும் விஷயம் குறித்த பகைப்புலத்தைச் சரியாக விளங்கிக்கொள்ளாமல் எழுதுவது ஒரு தடையாகும்

இன்றுள்ள விமர்சகர்கள் எழுத்தாளர்கள் வளர்வதற்கு இந்த விமர்சகர்களே பெரும் தடையாக இருந்து வருகிறார்கள் மூன்றுவதரமற்ற இந்திய சஞ்சிகைகளின் படையெடுப்பு என்று அவர் கூறினார்.

திரு. டாமினிக்ஜீவா பேசுகையில் எழுத்தாளர்கள் விமர்சகர்களைப்பற்றி கவலைப்படக்கூடாது அவர்கள் எழுதுகிறார்கள் நாம் படைக்கிறோம் ஆனால் விமர்சகர்கள் அடிப்பதால்தான் நாம் புடம் போடப்பட்டவர்களாக வளர முடியும் என்றார்.

குருதிமலை நாவல் தொழிலாளர் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வைக்காட்டவில்லையென்றும் தீயவர்களைப் பொலிசார் பிடித்துக் கொண்டுபோவதாகக் காட்டுவதின் மூலம் மாத்திரமே பிரச்னை தீர்ந்துவிடாது என்றும் அவர்கள் தொழிற்சங்க ரீதியில் கட்டுக்கோப்பாகப் போராட வேண்டும் என்றும் சொன்னார்.

அவர் இந்நூலின் தொகுதியாக மற்றும் ஒரு நூல் எழுதினால் மிகவும் சிறப்பாக அமையும் என்றார்.

நூலாசிரியர் திரு. ஞானசேகரன் தமது பதிலுரையில் கூறியதாவது தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதையும் அதையடுத்து அங்கு நடைபெற்ற கலவரங்களையும் கலவரத்தின் போது தோட்டங்களில் வாழ்ந்து வந்த தோட்டத் தொழிலாளர்கள் அயல் கிராமங்களில் வாழ்ந்து வந்த சிங்களமக்களால் தாக்கப்பட்டதையும் சேயிலை தோட்டங்கள் தொழிலாளர்கள் குடியிருந்த லயன்கள் ஆகியன தீ வைக்கப்பட்டதையும் தோட்டத்தில் வாழ்ந்து [illegible]

ஒருநாவலாக எழுதவேண்டும் என்று நினைத்தேன்.

அதற்காகத் தோட்டங்களுக்கும் சிங்கள மக்கள் வாழும் கிராமங்களுக்கும் சென்று இந்த நிலை ஏற்பட்டதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிய முற்பட்டேன் நான் கண்ட அறிந்த உண்மைகளை பையமாக கொண்டு எழுதப்பட்டது தான் இந்த நாவல்.

இந்நாவல் ஐம்பது வருடங்களுக்கு பின்னால் வரலாறு எழுதப்புகும் மாணவர்களுக்கு ஒரு தவறான கருத்தைக் கொடுத்து விடக்கூடாது என்ற நோக்கத்தோடு தான் இந்த நாவலை எழுதப் புகுந்தேன். (செ)

## யாழ். மாவட்டத்தில் 291 பாற்பண்ணைகள்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்டத்திலுள்ள பன்னிரண்டு கமநலச்சேவைகள் நிலையப் பகுதிகளில் 291 பாற்பண்ணைகள் நிறுவப்படவுள்ளன

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட விவசாயத்தின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர். கிளிநொச்சி, இராமநாதபுரம் அக்கராயன்குளம், சாவகச்சேரி, நல்லூர், வேலணை, கிரிமலை, உடுவில், புலோலி, அம்பன், பூநகரி, கைதடி ஆகிய கமநலச்சேவைகள் நிலையப் பகுதிகளில் அமைக்கப்படவுள்ள இந்தப் பண்ணைகள் இவ்வருட இறுதிக்குள் நிறுவப்பட்டுவிடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாற்பண்ணைகளை ஊக்குவிக்கும் முகமாக கிளிநொச்சி, நல்லூர், தொல்புரம் ஆகிய கமநலச் சேவை நிலையப் பகுதிகளில் மூன்று புதிய அரசாங்க பால் சேகரிப்பு நிலையங்களும், நல்லூரில் மூன்று தனிப்பட்ட பால் சேகரிப்பு நிலையங்களும் நிறுவப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம்மாவட்டத்திலுள்ள 18 கோழிப்பண்ணைகளுடன் மேலும் 28 கோழிப்பண்ணைகளைப் புதிதாக அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தாய் தந்தையற்ற இளைஞர் தற்கொலை

[மாவிட்டபுரம்]

மாமனார் புல்லுப் பிடுங்கி வருமாறு கூற, தோட்டத்திற்குச் சென்ற மருமகன் தோட்டத்திலிருந்த நஞ்சை எடுத்து அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

தெல்லிப்பழை சித்தியப்பளியடியைச் சேர்ந்த கருணமத்துரை ரவீந்திரன் என்ற 15 வயது இளைஞரே இவ்வாறு மரணமானவராவார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு நா. தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணை நடத்தினார்.

அச்சமயம் தாய், தந்தையற்ற காலமானவரை அவரது மாமனார் கந்தசாமி வளர்த்து வந்ததாகவும், சம்பவதினம் காலமானவர் விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது அவரை [illegible]

(5-ம் பக்கம் பார்க்க)


## சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி 80-

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர் சிறந்த சாரதி" போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் 'ஈழநாடு' பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் ரோட்டறிக்கழகம் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் சிறந்த சாரதி பெயர்

.................................... ....................................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர் பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No..............)

அனுப்புபவர் பெயர்.............................ஒப்பம்...........

விலாசம்..................................................



## I. C. M. A.
### Accountancy Courses at Percival Hall

மேற்படி கழக 1980 மே மாதப் பரீட்சைக்குரிய
மீளாய்வுக் கருத்தரங்கு (REVISION SEMINAR)
1980 மே மாதம் 10-ம், 11-ம் திகதிகளில் நடைபெறும்.
அனுமதி இலவசம்
மேற்படி கழக 1980 நவம்பர் மாதப் பரீட்சைக்குரிய பின்வரும் வகுப்பு நெறிகள் 19-5-1980 தொடக்கம் ஆரம்பமாகும்.
முழு நேர மாணவர்க்குத் தனியான பகல் நேர வகுப்பு
ஊழியம் செய் மாணவர்க்கு வாராந்த வகுப்புக்கள்
FOUNDATION A—B PROFESSIONAL I
PROFESSIONAL II
மனுச்செய் திகதி 12-5-1980
I A A பரீட்சை
மீளாய்வுக் கருத்தரங்கு 24, 25-5-1980
அனுமதி இலவசம்
வகுப்புக்கள் ஆரம்பம் 14-6-1980
மனுச்செய் திகதி 1-6-1980
விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்,
பதிவாளர்,
8, Chapell Street, Jaffna.
5666


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அகிம்சாப்பியாசத்திற்கு நிகரான தவம் யாதும் இல்லை. உண்மை பேசுதலாகிய விரதத்திற்கு இணையான விரதம் யாவும் இல்லை. புலனினதும் மனதினதும் ஒழுக்கப் பயிற்சிக்கொப்பான ஒழுக்கப் பயிற்சியாதும் இல்லை.

— சுவாமி சிவானந்தா

## மக்கள் கருத்து

## குருகுலம் விடுக்கும் ஓர் உருக்கமான வேண்டுகோள்

"சிறுதுளி பெருவெள்ளம்" என்பது பழமொழி யாரோ ஒருவர் இலட்சாதிபதியாக, பல இலட்சக்கணக்கான மக்களின் ஒரு ரூபாக்கள் சேர்க்கப்படுகின்றன. ஆனால் குருகுலம் பல்லாயிரக்கணக்கான அநாதரவற்ற, வசதியற்றவர்களுக்குப்பல கல்வி பயிற்றிப் பாரை உயர்த்திட - அவர்களை வாழச் செய்ய- ஆளுக்கு ஒரு ரூபா விகிதம் கேட்கின்றது இந்த உருக்கமான வேண்டுகோளை நிறைவேற்றமாட்டீர்களா!

எமது சமய அனுட்டானங்கள், சமய ஆசாரங்கள் வரவரத் தேய்ந்து புகைந்து போகின்றது. இந்நிலை முற்றி அற்றுப்போகாது தடுப்பதற்குக் குருகுலம் சேவை செய்து வருகின்றது

சைவ போதகர் பயிற்சி நிலையம் நிறுவி 25-45 வயதுக்குட்பட்டவர்கள் அல்லது சமயத்தில் விருப்புக்கொண்டு சமயத்தை வளர்ப்பதற்கும், சமூகத் தொண்டாற்றுவதற்கும் விரும்புவோரையும் பயிற்றுவதற்கு இலவச உண்டி உறையுள் அளிக்கக் குருகுலம் முன்வந்துள்ளது. இதற்கு உதவும்படி தலைக்கு ஒரு ரூபா உதவும்படி மிகவும் உருக்கமாகக் குருகுலம் கோருகின்றது.

இன்று நாம் மிகவும் வருந்தக்கூடிய நிலையில் இருக்கின்றோம் எமது சைவசமயம் மிகவும் தொன்மையானது, அன்பு வடிவானது, பேரின்பம் பயப்பது என்று மார்தட்டித் தோள் கொட்டிப் பேசுகின்றோம். ஆனால் நாம்சாதித்தது என்ன?

ஏதோ திருவிழாக்களைப் போட்டிக்குப் போட்டியாகச் செய்கின்றோம் திருநெறிக் கழகம், சிவநெறிக் கழகம் என இன்னோரன்ன பற்பல மன்றங்களைச் சிறப்பாக நடத்துகின்றோம் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டிகளை நடத்துகின்றோம். பரிசுகள், பாராட்டுக்கள் வழங்குகின்றோம்; திருமுறைவிழா, நால்வர் விழவுகள் நடத்துகின்றோம் இத்துடன் எமது சமயம் வளர்ந்துவிட்டது; வளர்த்துவிட்டோம் என்று பெருமிதமடைகின்றோம்

சித்தவறுதலை இன்னும் வளரவிடலாமா? இனியாவது செயலில் இறங்கவேண்டாமா? இப்படியே விடுதல் சைவசமயிகளாகிய எங்களுக்கு அழகா? சிந்தியுங்கள்.

எத்தனை எத்தனை பெண்கள் தம் திருமணம் நிறைவுறச் சில தடைகளால் வருந்தி, திருமணமே வேண்டாமென வெறுத்துத் தகுந்த அமைதியான இடமில்லாது தவிக்கின்றனர் திருமணமாகி இளமையில் கணவனைத் துறந்தும், இழந்தும் சமயானுட்டானம் நாடி அமைதியான இடங்களைத் தேடித்தேடி அலைகின்றனர். இவர்கட்கெல்லாம் குருகுலம் சமயப் பயிற்சி, தொழிற் பயிற்சிமூலம் சாந்தமளிக்கச் சீழியும் சமூகத்தைத் தூக்கிவிட-முன்வந்துள்ளது. ஆனால் அதற்குப் போதிய கட்டிட வசதியில்லை; அதற்காகத்தான் உங்களிடம் ஒரு ரூபா விகிதம் கோரி நிற்கின்றது.

தேசிய லொத்தர் சபையில் சேரும்பலஇலட்சப் பணத்தால் யாரோ ஒருவர் இருவர்தான் பணக்காரராகின்றனர் அப்பணம் அவர்கள் குடும்பத்திற்கோ அல்லது சந்ததிக்கோ உதவுகின்றது. ஆனால் உங்கள் ஒவ்வொருவரிடமும் குருகுலம் கோரும் ஒவ்வொரு ரூபாவும் தன்னிடத்தில் பல திசைகளிலிருந்துவரும் பல குழந்தைகட்கு மல்லாமல் பல துறைக் கல்வி தொழிற்பயிற்சி சமயம் வளர்க்க பல்லாண்டு வாழும் கட்டிட நிதிக்காகக் கேட்கின்றது.

உங்கள் ஒவ்வொரு ரூபா பணமும் நீங்கள் உயிருடன் வாழும் காலத்தில்மட்டுமல்லாமல் இறந்தபின் அதற்கப்பாலும், பல துறையிலும் ஆதரவற்ற ஆண் பெண் இருபாலாரிக்கும் ஆதரவளிப்பதால் பல்லாண்டு காலம் தருமம் தேடித்தருகின்றது.

புலவர்
சி. விசு[illegible]

குருகுலம்,
கிளிநொச்சி.

# வவனியா மகாநாட்டிலும் அதன் பின்னரும் நடந்தது என்ன?

## "சுயாட்சி" வ. நவரத்தினம் விளக்கம்

**15-4-80** ஈழநாட்டிலே திரு. அமிர்தலிங்கத்தின் பதிலையும். 17-4-80 ஈழநாட்டில் அரியாலை கருத்தரங்கில் அவரின் பேச்சைப் பற்றிய அரியாலை நிருபரின் செய்தியையும் நான்படித்திருந்தேன். ஈழநாட்டில் வந்தவாறு தான் பேசவில்லை என்ற திரு அமிர்தலிங்கத்தின் கூற்றை ஏற்றுக் கொண்டு, மற்றப்படி மற்றதெல்லாம் அவரின் பாராளுமன்ற அரசியல் நாடகத்தின் ஓர் அங்கமென்று கருதிக் கொண்டபடியால் அதில் எனக்கு அக்கறையில்லை என்று தள்ளிவிட்டு வாளாவிருந்தேன். ஆனால் சென்ற 25-4-80 வெள்ளியன்று இளைஞர் பேரவைத் தலைவர்கள் சிலர் என்னை வந்து கண்டு சில விளக்கங்கள் கேரினார்கள் அவர்கள்தான்கோரிக்கையின் பயனாக இந்த அறிக்கையை வெளியிட வேண்டிநேரிட்டுள்ளது.

முக்கியமாக 1958-ம் ஆண்டு வவனியாவில் நடந்ததமிழரசுக் கட்சி மகாநாடு பற்றியும், அதைத் தொடர்ந்து கலவரங்கள் ஏற்பட்டு ஏற்புக் காவவலில் இருந்தசமயத்தில் நடந்த சம்பவங்கள் பற்றிக் கூறி, "இதுதான் தந்தை செல்வாவுக்கும் நண்பர் நவரத்தினத்திற்குமுள்ளவேறுபாடு" என்று திரு. அமிர்தலிங்கம் முடித்திருப்பது தங்களுக்கு எத்தவிதமான அர்த்தத்தையும் தரவில்லை என்றும், உண்மையாக நடந்த நிகழ்ச்சியைக் கூறமுடியுமா என்றும் கேட்டுக்கொண்டார்கள் இளைஞர் பேரவைத் தலைவர்கள் சொல்லுகிறேன்.

### வவனியா மகாநாடு கூட்டப்பட்டது ஏன்?

1956-ல் நடந்த சரித்திரப் பிரசித்திபெற்ற திருமலை யாத்திரையைத் தொடர்ந்து நிறைவேறிய திருகோணமலைத் தீர்மானத்திலே தமிழரசு நிறுவ நடவடிக்கை எடுப்பதற்காக அரசாங்கத்துக்கு ஒரு வருட காலகெடு கொடுத்திருந்தோம். தவறினால் நேரடி நடவடிக்கையில் இறங்குவோம் என்று சொல்லியிருந்தோம் நாட்டில் நடந்து வந்த ஆயத்தங்களைக் கண்ட பிரதம மந்திரி திரு. பண்டாரநாயக்கா பேச்சுவார்த்தைக்கு அழைத்ததும் பேச்சுக்கள் நடந்து இழுபட்டதும். பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டதும், பின்பு அது கிழித்தெறியப்பட்டதும், ஆயன அதைத் தடைப்படுத்திவைத்திருந்தன அதை நிறைவேற்றக் கூட்டப்பட்டதே 1958 வவனியா மகாநாடு, நேரடி நடவடிக்கையில் இறங்குவது என்பதுதான் அந்த மகாநாட்டின் முக்கிய தீர்மானம், அந்தச் சமயத்தில் அரசியல் காஸனத்தை மறுபரிசீலனை செய்வதற்காக பாராளுமன்ற பொறுக்குக் குழு ஒன்றை நியமித்திருந்தார் பிரதமர் திரு. பண்டாரநாயக்கா. அதில் திரு. செல்வநாயகத்தையும் உறுப்பினராப் போட்டிருந்தார். அரசாங்கத்துக்கு எதிராக போர்க்காலம் கொள்ளப் போகிற நாங்கள் (சாத்வீக முறையில்தான்) பிரதமரின் பொறுக்குக் குழுவில் அங்கம் வகிப்பது ஒன்றுக்கொன்று முரண்பாடானது என்று எங்களிற் சிலர் கருதினோம். இந்தப் பிரச்சினையை நான்தான் முதலில் எழுப்பி திரு. வன்னியசிங்கத்துடனும் திரு. அமிர்தலிங்கத்துடனும் ஆலோசனை செய்து அதற்காக விஷயாலோசனைக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை சமர்ப்பிக்கிறது என்று முடிவு கட்டினோம், அதாவது பொறுக்குக் குழு அங்கத்துவத்திலிருந்து திரு. செல்வநாயகம் இராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரும் தீர்மானம் இந்தத் தீர்மானத்தை பிரேரிக்கும்படி திரு. வன்னியசிங்கத்தை நான் கேட்டேன். அவர் என்னைத் தனிமையாக அழைத்துப் போய் சொன்னார் "பெரியவரைத் தள்ளி விட்டு தமிழர் தலைவன் என்ற பதவியை வன்னியசிங்கம் கைப்பற்றப் பார்க்கிறார் என்று எங்களைப் பிளவுபடுத்தும் நோக்கத்துடன் காங்கிரஸ் விஷமிகள் சிலர் வலிகாமம் வடக்குப் பகுதியில் குசுகுசுப் பிரசாரம் செய்து வருகிறார்கள் எங்கள் கட்சியினரும் சிலர் அதை விழுங்கி யிருக்கிறார்கள். நான் பிரேரித்தால் அந்தப் பிரசாரத்துக்கு தூபம் போடுவதாக முடியும் நீங்கள் பிரேரியுங்கள் என்று என்னைக் கேட்டார். கடைசியில் அந்தத் தீர்மானத்தை நான் பிரேரித்தேன் அல்லது திரு. அமிர்தலிங்கம்தான் பிரேரித்தாரா என்று இப்பொழுது எனக்கு ஞாபகமில்லை. தான் தான் பிரேரித்ததாக பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சொன்னால் முதுமையினால் பிடிக்கப்பட்டிருக்கும் நான் ஏற்காமல் இருக்க முடியாது.

### தலைமைதாங்கமுடியாது என்றார் செல்வநாயகம்

பொறுக்குக் குழுவில் தான் இல்லாவிட்டால் பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளை புனரமைப்பு செய்யும் விஷயத்தில் தமிழருக்கு திங்கு நேர்ந்திடும் என்று கூறி திரு. செல்வநாயகம் பிரேரணையை எதிர்த்தார். அவர் பக்கத்தில் டாக்டர் நாகநாதன் திரு. இராஜவரோதயம் திரு. வி. என். நவரத்தினம் சரசாலை ஏ. கே. இராமலிங்கம் போன்றவர்கள் வாதாடினார்கள் பிரேரணையைக் கொண்டுவந்த எங்கள் பக்கத்தில் திருவாளர்கள் வன்னியசிங்கம், அமிர்தலிங்கம் வீ.ஏ. கந்தையா ஆவரங்கால் சின்னத்துரை பருத்தித்துறை மாலி சந்தி செல்லையா போன்றோர் வாதாடினோம் இருபக்கமும் விட்டுக் கொடுக்காமல் இரவு முழுவதும் சர்ச்சை நடந்தது அன்றிரவு வவனியாவில் ஒரு பரபரப்பு. [illegible] மட்டக்களப்பில் [illegible] காட் ஒருவரின் சடலமும் இன்னொருவரின் சடலமும் யாழ்ப்பாணம் கொண்டு போவதற்காக ரயிலில் ஏற்றி கொண்டுவந்தன வவனியா ரயில் நிலையத்தில் நாங்கள் போய் அஞ்சலி செலுத்துவதாக ஒழுங்கு. அதுவுமன்றி பதவியாவிலிருந்து ஆயுதம் தாங்கிய காடையர்கள் வவனியாவைத் தரைமட்டமாக்குவதற்காக வந்துகொண்டிருக்கிறார்கள் என்று ஒரு செய்தி வந்தது உடனே வவனியாத் தொண்டர்கள் நகரத்தைச்சுற்றி நாற்புறமும் காவல் போட்டார்கள். வவனியா எம். பி பெரியார் சுந்தரலிங்கம் மேற்பார்வையில் பந்தோபஸ்து நடவடிக்கைகள் செயல்பட்டன. இத்தனையையும் கவனித்துக்கொண்டு மண்டபத்தில் விவாதமும் கடுமையாக நடந்தது. விடியப்புறம் 4-00 மணியளவில் பிரேரணை சபையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டது. பெரியவர் அதிர்ந்து போனார். சிறிது நேரத்திற்குப்பின், "அப்படியானால் நேரடி நடவடிக்கைப் போராட்டத்துக்கு நான் தலைமைதாங்க முடியாது" என்று சொல்லி பெரிய குண்டு ஒன்றைத் தூக்கி சபை மத்தியில் வீசிவிட்டு, எழுந்து தனது இருப்பிடத்துக்கு போய்விட்டார்.

டார்படுப்பதற்காக. உடனே ஏ. கே இராமலிங்கம் சட்டையைக் களைந்து எறிந்துவிட்டு கொடுக்குவரிந்து கட்டிக்கொண்டு எல்லாரையும் துவம்சம்செய்கிறேன் என்று எழுந்துவிட்டார் இப்படியான சந்தடியோடு அன்றிரவு கூட்டம் முடிந்தது. அடுத்தநாள் காலையில்வந்தபொழுது திரு செல்வநாயகம் "நேற்றிரவு சொன்னதை வாபஸ் பெற்றுக்கொண்டு நேரடி நடவடிக்கைப் போராட்டத்துக்கு நான் தலைமை தாங்கச் சம்மதிக்கிறேன்" என்றார்.

### மாநாடு முடிந்தபின் நடந்த சம்பவங்கள்

மகாநாடு முடிந்த பின்பு கொழும்பில் இருப்பவர்கள் கொழும்புக்கு திரும்பினோம். அன்று மத்தியானம் கொழும்பு புறக்கோட்டையில் தமிழர்கள் கடைகள் தாக்கப்பட்டன அந்தக்காலத்தில் திரு அமிர்தலிங்கம் கொழும்புக்கு வந்தால் எனது வீட்டில்தான் தங்கியிருப்பார். எனது வீட்டில் இருந்துகொண்டுதான்பாராளுமன்ற அலுவல்களைக் கவனிப்பார். ஆதலால் அவரின் உத்தியோகபூர்வமான கொழும்பு டெலிபோன் எனது வீட்டில் பொருத்தப்பட்டிருந்தது. இப்பொழுது திருமதி மைத்திரிபால சேனநாயக்காவாக இருக்கும் பெண்மணி அப்போ கல்யாணத்துக்கு முன்பு 'ஒப்சேவர்' பத்திரிகையில் கடமையாற்றியவர், இந்த டெலிபோனில் அன்றிரவு மகாநாட்டு விஷயங்களைப் பற்றி என்னோடு பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் டெலிபோன் துண்டிக்கப்பட்டது. காடையர் பட்டாளம் எனது வீட்டைத் தாக்கியது. 'அடோ, நவரத்ன, பெடறல் காறயோ' என்று கூக்குரல் போட்டவண்ணம் 40, 50 Molotov's Cocktails என்று சொல்லப்படும் பெற்றோல் குண்டுகளை வீசி வீட்டின் முன் பக்கத்தை நொருக்கினார்கள் முன்பக்கம் தீப்பற்றிக்கொண்டது. அடுத்த நாள் எனது மனைவி மக்களுடன் வெளியேறி உறவினர் வீடு ஒன்றில் போயிருந்தோம். என்னைப் பார்க்க வந்த டாக்டர் நாகநாதன் எனது பழைய வீட்டடியில் வைத்து தாக்கப்பட்டு காயமடைந்தார். அதற்கடுத்தநாள் திரு. செல்வநாயகம், திரு. வன்னியசிங்கம், திரு. அமிர்தலிங்கம் முதலியோர் பாராளுமன்றத்திலிருந்து நேரே நான் இருந்த வீட்டுக்கு வந்து உரையாடிவிட்டுப் போனார்கள். அதற்குப்பின் பலநாட்களாக நாங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கமுடியாமல் போய்விட்டது அடுத்தநாள் எனது உறவினர் வீட்டில் வைத்து நான் கைது செய்யப்பட்டேன், ஆனால் வீட்டின் முன்புறமும் பின்புறமும் பொலிஸ் காவல்போட்டு அங்கேயே காவலில் வைக்கப்பட்டேன். திருவாளர்கள் வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், வி. என் நவரத்தினம் இராஜவரோதயம், இராசதுரை முதலியோர் பாராளுமன்றத்துக்கு வெளியே றோட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டு கோல்பேஸ் ஹோட்டல் அறை ஒன்றில் காவலில் வைக்கப்பட்டார்கள் திரு. செல்வநாயகம், டாக்டர் நாகநாதன் திரு. வி ஏ. கந்தையா ஆகியோரும் அவரவர் வீடுகளில் காவலில் வைக்கப்பட்டனர் 10 நாட்களுக்குப் பின்பு என்னையும் கோல்பேஸ் ஹோட்டலில் இருந்தவர்களையும் இப்பொழுது பெளத்தாலோகமாவத்தை என்று சொல்லப்படும் பழைய புல்லர்ஸ் றோட்டில் ஸ்டான்மோர் இரசன்ட் வீதியிலுள்ள அரசாங்க வீடொன்றில் கொண்டுபோய்

(6ம் பக்கம் பார்க்க)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ அமிர்தலிங்கம் செல்வா பிறந்தநாள் விளாவில் பேசுகையில், சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் பற்றிக் குறிப்பிட்டதாக 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த செய்திக்கு திரு. நவாரத்தினம் பதிலளித்திருந்தார். அவரது பதிலுக்கு திரு அமிர்தலிங்கம் கொடுத்த விளக்கம் 15-4-80 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகியிருந்தது. இதற்கு திரு. நவரத்தினம் தரும் விளக்கம் இன்று இங்கு தரப்படுகிறது இந்தச் சர்ச்சையை இன்றுள்ள நிலையில் நீடித்துக்கொண்டு போவதை நாம்விரும்பவில்லை, ஒரே இயக்கத்தில் ஒன்ருக இருந்து உழைத்தவர்கள் இன்று பழைய சம்பவங்களைப் பகிரங்கமாக எடுத்துக் கூறுவது அழகல்ல. ஆனாலும் "இருட்டடிப்புச் செய்கிறோம்" என்று எவரும் எம் மீது 'பழி' யைப் போடக்கூடாது என்பதற்காகவே இருதரப்பினரின் விளக்கங்களையும் தருகிறோம்- இத்துடன் இந்தச் சர்ச்சையை இருதரப்பினரும் முடிந்துக் கொள்வார்களெனவும் நம்புகின்றோம். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘முல்லைத்தீவில் தொழிலாளர் உரிமைகளை இழந்து இருக்கின்றனர்’

## மேதினக் கூட்டத்தில் கவலை

(முல்லைத்தீவு)

“முல்லைத்தீவு மாவட்ட தொழிலாளர்கள் பலர் அரசியல் பழிவாங்கலால் கஷ்டப்பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதால் ஏனைய தொழிலாளர்களும் தமது உரிமைகளை இழந்த நிலையில் இருக்கின்றனர்”

இவ்வாறு முல்லைத்தீவில் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் பேசிய இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதி திரு எஸ் சரவணபவன் கூறினார்.

முல்லைத்தீவில் முதல் தடவையாக பிரமாண்டமான ஊர்வலத்துடன் மேதின விழா சிறப்பாக நடைபெற்றது. முல்லை மறுமலர்ச்சிக் கழகத்தினால் நடாத்தப்பட்ட இவ்விழாவின் ஊர்வலத்தில் தொழிற்சங்க வாதிகளும் கழக உறுப்பினர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நெறியாளர் திரு ஆ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தலைவர் தமது தலைமையுரையில்,

‘முல்லைத்தீவில் தொழிலாளர் தினத்தை எவரும் நினைவு கொள்ள முன்வராதபோதும் முல்லை மறுமலர்ச்சிக் கழகம் தொழிற்சங்கங்களுடன் இணைந்து நடாத்துவது மகிழ்ச்சிக்குரியது. முல்லைத்தீவில் மீனவர்கள் முன்னைய காலங்களைவிட தற்போது எரிபொருள் வேறு வசதிகள் இன்றி கஷ்டப்படுகின்றனர்” என்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க முல்லைத்தீவுக்கிளை உறுப்பினர் திரு க. திருஞானம் பேசும்போது, “தொழிலாளர்கள் பல அமைப்புகளில் சிதறுண்டு இருக்கின்றார்கள் இவர்கள் எல்லோரும் ஒரே அமைப்புகளின்கீழ் இயங்கவேண்டும்” என்றார்.

சட்டத்தரணி திரு. ஜி. இராஜகுலேந்திரா பேசும்போது, “இலங்கையில் பல இடங்களில் நடைபெறும் பிரமாண்டமான மேதினவிழா தொழிலாளர் நலன் கருதி நடைபெறும் மேதினமல்ல அதுதமது அரசியல் லாபங்களைக் கருத்திற்கொண்டு நடைபெறுகின்றன. முல்லைத்தீவில் இக்கழகம் துணிந்து நடாத்தும் மேதினமே பாட்டாளி மக்களின் நலனுக்காக நடைபெறும் மேதினம்” என்று பெருமைப்பட்டார்.

திருவாளர்கள் இ. விக்கினராஜா, மு. சுப்பிரமணியம், எஸ் அருணகிரி, பொன் புத்திசிகாமணி உட்பட பலர் உரையாற்றினார்கள். (த

# “மேதினத்தைக் கொண்டாடியதன் மூலம் தியாகிகளை களங்கப்படுத்திவிட்டனர்”

## குளியாப்பிட்டி பெர்னாண்டோ கவலை

(யாழ்ப்பாணம்)

“மேதினத்தைக் கொண்டாட உரிமையற்றவர்கள் எல்லாம் மேதினத்தைக் கொண்டாடுவதன்மூலம் செந்தலைவர்களையும் தியாகிகளையும் களங்கப்படுத்திவிட்டார்கள்”

இவ்வாறு ஜனநாயகத் தேசிய முன்னணித் தலைவர் குளியாப்பிட்டி பெர்னாண்டோ யாழ் நகரமண்டபத்தில் நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் (மார்க்ஸிச-லெனின்) கட்சி மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

“ஆண்டாண்டு காலமாகத் தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைகள் பறிக்கப்பட்டு மீண்டும் ஓர் போராட்டத் தேவையை ஏற்படுத்தியுள்ளது இன்றைய அரசு தாமும் தொழிலாளர் தோழர்கள் எனக் காட்டிக்கொள்ள முனையும். இந்த வேளையில் எந்த ஒரு தொழிலாளியும் இலங்கையில் எட்டுமணி நேர வேலையுடன் ஓய்வு பெறும் நிலையில் இல்லை எனவே இந்த உரிமையை மீண்டும் பெறுவதற்காகப் போராட வேண்டிய பொறுப்பு இன்று எம்முள் வைக்கப்பட்டுள்ளது.

கிழைக்காற்று இயக்க பிரதிநிதி திரு எம் டி. டானியல் பேசுகையில் “கடந்த காலத்தில் ஆளும் வர்க்கம் தொழிலாளர்களுக்கு வழங்கிய பரிசினால்தான் வெள்ளைக் கொடி செங்கொடியானதே தவிர, நீலக் கொடிக்கோ பச்சைக் கொடிக்கோ மேதினம் கொண்டாட எவ்வித அருகதையும் கிடையாது. இரண்டு முதலாளித்துவ அரசாங்கங்களும் தொடர்ந்து வடகுதி மக்களின் அபிவிருத்திக்குத் தடைக்கல்லாகவே இருந்துவருகின்றன” என்றார்.

திரு சமரபால வியனகே பேசும் போது “கடந்த அரசின் சொல்பாட்டால் நடமாடும் எலும்புக்கூடுகளாக ஆக்கப்பட்டுள்ள நாட்டு மக்களை நல்லநிலைக்குக் கொண்டு வருவதே எமது நோக்கம் எனக் கூறிப் பதவிக்கு வந்த ஜே ஆரும் அவரது அரசும் இன்று அந்த எலும்புக் கூடுகள் தவழவும் முடியாத நிலைக்கு ஆக்கிவைத்துள்ளது” என்றார்.

டாக்டர் சு. வே. சீனிவாசகம் தமதுரையின்போது “கடந்த காலங்களில் மேதினக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் சேவிடண்ணியவர்களே இன்று போட்டி போட்டுக்கொண்டு ஊர்வலமும் கூட்டமும் நடத்துவதன் மூலம் மக்களை ஏமாற்ற முனைகின்றனர்” என்றார்.

திரு. ச. சுட்பிரமணியம் உட்பட மற்றும் பலரும் பேசினர். (கொ-கு)

# “அடுத்த மேதினத்தையாவது தமிழ் ஈழத்தில் கொண்டாடுவோம்”

(யாழ்ப்பாணம்)

“தமிழ் ஈழப் போராட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். கடந்த மேதின விழாவில் தலைவர் திரு. அமிர்தலிங்கம், அடுத்த மேதினத்தை தமிழ் ஈழத்தில் கொண்டாடுவோம் என்றார். நடந்தது என்ன? அடுத்த மேதினத்தையாவது தமிழ் ஈழத்தில் கொண்டாட முயலுவோம்”

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேதின விழாவில் பயிற்செய்கை உத்தியோகத்தர் சங்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். செந்தூர்ராசா பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

“22 விவசாய உத்தியோகத்தர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 22 பேரின்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாத ஜனாதிபதி தமிழ் ஈழத்தைக் கொடுப்பார் என எதிர்பார்க்க முடியாது. இந்த அரசு திட்டமிட்டு தமிழ் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றி வருகிறது

### யூ. என்· பி, முதல் எதிரி

யூ என் பி. தமிழினத்தின் முதல் எதிரி. யூ என் பி. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் போராட்டம் இடம் பெறுவதில்லை.

தமிழ் ஆசிரியர் சங்க பிரதிநிதி திரு. க. பஞ்சலிங்கம் கூறியதாவது!

1948-ம் ஆண்டு இலங்கைத் தமிழர் ஆசிரியர் கழகம் இனரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் எத்தனை கஷ்டத்தின் மத்தியில் ஆரம்பித்தோம்

தலைவர் திரு. ரணசிங்கா உட்பட 10 பேர் அரசியல் பழிவாங்கலாக இடமாற்றம் செய்யப்பட்டனர் 4 பேருக்கு மாற்று இடம் கொடுக்கப்பட்டது. வணசிங்கா உட்பட 6 பேர் நிலையில் மாற்றம் இல்லை

சுமார் 10,000 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ் ஆசிரியர் கழகம், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு என்றும் சுயந்தமாக இருக்கிறது.

### அபிவிருத்திக்காக வாக்களிக்கவில்லை

அஞ்சல் எழுது வினைஞர் சங்க பிரதிநிதி திரு தங்கவேலாயுதம் கூறியதாவது!

1977-ம் ஆண்டு தேர்தலில், அபிவிருத்திக்காகவோ, பள்ளிக்கூடத்திற்காகவோ மக்கள் வாக்களிக்கவில்லை; தமிழ் ஈழம் ஒன்றுக்காக மட்டுமே வாக்களித்தார்கள் தேர்தல் கூட்டங்களில் அபிருத்தி பற்றி ஒரு வார்த்தையுமே கூறவில்லை இளைஞர்கள் தமிழ் ஈழத்திற்காகவே, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர்

கடந்த காலத்தி பேச்சு வார்த்தை’ வாக்குறுதி ஒப்பந்தம் மூலம் பலதடவை எமாந்துவிட்டோம். இனிமேலும் அவற்றிற்கு இடமில்லை.

### கடற்றொழிலாளர் பாதிப்பு

கடல் தொழில் ஊழியர்சங்க பிரதிநிதி திரு ஸ்பிரியல் கூறியதாவது! கடல்தொழில் அபிவிருத்திக்கு அரசு 50 கோடி செலவிட்டுள்ளது தமிழ்ப் பகுதிக்கு அரைக் கோடியும் கிடைக்கவில்லை சிங்களப்பகுதியில் 300 கடற்றொழிலாளருக்கு 300 லட்சம் ரூபா வழங்கப்பட்டது தமிழ்ப்பகுதியில் 3 பேருக்குப் வழங்கப்படவில்லை.

சீநோர் நிறுவனத்தில் செய்யப்பட்ட படகுகளையே தமிழ்க் கடற்றொழிலாளர் பாவித்து வந்தனர். இன்று அவற்றையும் அரசு எடுத்து சிங்களப் பகுதிக்கு அனுப்புகின்றது நோர்வேயிலிருந்து வந்த 40 வலை பின்னும் இயந்திரங்கள் எமக்குக்கிடைக்கவில்லை வலைகள் இங்கு இரட்டிப்பு விலையில் விற்கப்படுகின்றன. ஐஸ் தொழிற்சாலை இல்லாததினால் கடற்றொழிலாளர் கஷ்டப்படுகின்றனர் குருநகரிலுள்ள ஐஸ் தொழிற்சாலை சரியாக இயங்குவதில்லை இப்பிரச்சினையை தீர்க்க தனித்தமிழ் நாடுதான் ஒரே வழி.

ஜனாப் சாகுல் ஹமீத் பேசுகையில் ... மக்களுக்கு தமிழ் ஈழம் ... என்றார்.

# மனைவி மக்களை இழந்தவர் கவலையால் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

மனைவி மக்களை இழந்த வீடொன்றில் தனியே வாழ்ந்துவந்த ஒருவர் தொடர்ந்தும் வாழ விரும்பாததால் இருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்ட பரிதாப சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது.

தற்கொலை செய்துகொண்ட அன்னசத்திரம் ஒழுங்கையைச் சேர்ந்த நாகையா சிவப்பிரகாசம் (33 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். மரணவிசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ் பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

காலஞ்சென்றவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் மரண விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்டது.

தான் தொடர்ந்து வாழ விரும்பாததால் சாக விரும்புவதாக அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

மரணமானவரின் தாய் நாகையா ஞானப்பூங்கோதை சாட்சியமளிக்கையில் இறந்த தமது மகனின் மனைவி 6 மாதங்களுக்கு முன் யாழ் ஆஸ்பத்திரியில் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்ததாகவும் குழந்தைகளும் தாயும் இறந்துவிட்டதாகவும் அதன்பின் மகன் மிகவும் வேதனையுடன் காணப்பட்டதாகவும் வீட்டில் தனியே வசித்து வந்ததாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் முகாமையாளராக கடமையாற்றிய அவர் அவ்வேலையையும் விட்டு வேலை இல்லாதிருந்ததாகவும் அதனால் கடன் தொல்லை ஏற்படவே தமது காணியை விற்று கடனை அடைத்துவிட்டு மிகுதிப் பணத்தில் தமது தம்பிக்கு ஒரு கார் வாங்கிக் கொடுத்ததாகவும் சொன்னார். அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

“சம்பவ தினம் காலை சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே போனவர் வெகு நேரமாக வீட்டுக்குவரவில்லை. அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது அவரது நண்பர் பாலசுப்பிரமணியம் என்பவர் வந்து எனது மகன் மருந்து குடித்துவிட்டு பிறவுன்றோட் நரியன்குண்டுச் சந்தியில் சைக்கிள் ஒன்றுடன் தள்ளாடிக் கொண்டிருந்ததாகவும் அடயோது தான் அவ்வீதியால் சென்றதாகவும் மகனை வாடகைக்காரில் ஏற்றிசென்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் கூறி 47 ரூபா வையும், சைக்கிள் திறப்பையும் என்னிடம் தந்தார் நானும் எனது மூத்த மகன் முத்துக்குமாரும் யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்றபொது எனது மகன் சிவப்பிரகாசம் இறந்துவிட்டார் எனத் தெரிவித்தனர்” என்றார்.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் சந்திரசேக்கா சாட்சிகளை ஆஜர் செய்தார். (கொ-அ

## வர்த்தக அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் முக்கிய உணவுப் பொருட்களை தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு விநியோகம் செய்யும் கூட்டுறவுக் கடைகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தக அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி உள்ளூர் வர்த்தக ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## ச, ச. நிலைய ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை வடகிழக்கு சன சமூக நிலையத்தின் 30-வது ஆண்டு நிறைவுவிழா இப்மாதம் 29-ந், 30-ந் திகதிகளில் நடைபெறவுள்ளது.

விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், விநோதஉடைப் போட்டி, விவாதமேடை, இன்னிசை, மெல்லிசை, நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும். (கெ-அ)

கருட்டுத் தொழிலாளர் சங்க பிரதிநிதி திரு. ஏ துரைராஜசிங்கம், நெசவு தொழிலாளர் பிரதிநிதி திரு. ஹென்றி ஆசீர்வாதம் சுகாதார சேவையாளர் சங்க பிரதிநிதி திரு தெ... ... உட்பட பலர் பேசினார்கள். (க-கு)

## ரசிக ரஞ்சன சபா இசை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரஸிகரஞ்சன சபாவின் 29வது ஆண்டு இசை விழா இம்மாதம் 9ம் திகதி ஆரம்பமாக விருக்கிறது. தொடர்ந்து 10 நாட்களுக்கு விழா நடைபெறும் ஈழத்து இசைக் கலைஞர் பலரும் பங்கு பற்றுவார்கள். சபாவின் சங்கீதக் கல்லூரி மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

பதினொராம் நாள் நடனம், நாட்டிய நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானொலியில் அஞ்சல் செய்யக்கோருவதென சபாவின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## தி. மு. க. தேர்தல் அறிக்கை மே 7இல்

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் தமிழ் நாட்டுத் தலைவர் திரு. எம் பி. சுப்பிரமணியம் தமிழகம் திரும்பியதும் அவருடன் பேச்சு நடத்திய பின்னர் தி. மு. கவின் தேர்தல் அறிக்கை இம்மாதம் 7ம் அல்லது 8ம் திகதிகளில் வெளியிடப்படும்.

இவ்வாறு தி மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

இரண்டொரு தினங்களில் தாம் தேர்தல் சுற்றுப் பயணத்தை தமிழகம் எங்கும் மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் கூறினார். (இ)

## சமூக சேவையாளருக்கு பாராட்டு

(கோப்பாய்)

கோப்பாயில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 30வது வருடாந்த மகாநாட்டில் கோப்பாயைச் சேர்ந்த சமூகசேவையாளரான திரு எம். கே. இளையப்பாவின் சேவை நலன்கள் பாராட்டப் பெற்று “சமூகரத்தினம்” என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் கச்சேரியில் காரியாலய காரிய உதவியாளராகக் கடமையாற்றும் திரு. எம். கே. இளையப்பு அரசாங்க பொது சேவை தொழிலாளர் சங்க யாழ் கிளையின் முன்னாள் பொருளாளராகவும் உபதலைவராகவும் கோப்பாயிலுள்ள பல சமூகசேவை நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உழைத்து அருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# “பனம்பொரு... அந்நிய செல...

(அராலி)

“எந்த ... தொழிற் தலைமை அலுவல... கள், கூட்டுத்தாபனங்கள் ... நாட்டிலுள்ளன. ஆ... அவையெல்லாம் வட... கிழக்கு மாகாணங்களில... வில்லை வடக்கில் ஒரு ... தொழிற் கூட்டுத்தாபன ... தலைமையகமுண்டெனில் ... பனம்பொருட் கூட்டுத்... னந்தான் பனம்பொருட்... மூலப்பொருட்கள ... கொண்டு இந்தியாவில் ... வும் தமிழ்நாட்டில் பல... கைத்தொழிற் பொ... உற்பத்தி செய்து ... தொகையான வெளிநாட... செலாவணி சேர்க்க... கிறது. அப்படி நாடும் ... நிய செலாவணியை ... முடியும்.”

இவ்வாறு அராலி ... கிராமோதய கிராம... விருத்தி சிறு கைத்தொ... நிலைய புதிய ... பனம்பொருட் கூட்... தாபனத் தலைவர் திரு. ... குபேரிடம் கையளிப்பு ... த்தில் பிரதம விரு... ராகக் கலந்துகொண்டு ... யாற்றிய வட்டுக்கோட... எம். பி. திரு. தா. திரு... கரசு கூறினார்.

விழா அபிவிருத்திச... தலைவர் திரு. சி. சுப்பிர... யம் தலைமையில்நடைபெ... பயிற்சியாளராக 20 யுவ... அயற்கிராமங்களிலி... தெரிவு பெற்றனர். ... 30 பேர் அராலிக் கிரா... லிருந்து தெரியப்ப... பயிற்சிக்காலத்தில் ... ருக்கு வேதனம் வ... டும்.

வலிமேற்கு ... அதிபர் திரு. ஏ. செந்தி... வேல் இவ்வைபவத்தில் ...



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "பனம்பொருள் உற்பத்தி மூலம் அந்நிய செலாவணி பெறலாம்"

--வட்டு எம். பி.

(அராலி)

"எ த ... பெ ... கைத் தொழிற் தலைமை அலுவலகம், கூட்டுத்தாபனங்கள் இந் ... டிலுள்ளன. ஆனால் ... வயெல்லாம் வடக்கு- ... க்கு மகாணங்களிலமைய ... ல வடக்கில் ஒரு கைத் தொழிற் கூட்டுத்தாபனத்தின் ... மையகமுண்டெனில் அது ... ம்பொருட் கூட்டுத்தாப ... ாள் பனம்பொருட்களை ... ப்பொருட்களாகச் ... ண்டு இந்தியாவில் அது தமிழ்நாட்டில் பல்வேறு ... தொழிற் பொருட்கள் ... த்தி செய்து பெருந் ... கையான வெளிநாட்டுச் ... ாவணி சேர்க்கப்படு ... அப்படி நாமும் அந் ... செலாவணியைப் பெற ... ம்."

... வாறு அராலி தெற்கு ... வாலை கிராமாபி ... சிறு கைத்தொழில் ... புதிய மண்டபத்தை ... பொருட் கூட்டுத் ... த் தலைவர் திரு. கனக ... டம் கையளிப்பு வைப ... பிரதம விருந்தின ... கலந்துகொண்டு உரை ... ிய வட்டுக்கோட்டை ... திரு. தா. திருநாவுக் ... கூறினார்.

... அபிவிருத்திச்சபைத் ... திரு. சி. சுப்பிரமணி ... லைமையில் நடைபெற்றது. ... ளாளராக 20 யுவதிகள் ... கிராமங்களிலிருந்து ... பெற்றனர். மேலும் ... அராலிக் கிராமத்தி ... தெரியப்படுவர். ... க்காலத்தில் இவர் ... வேதனம் வழங்கப் ... மேற்படி உதவி அரசாங்க ... திரு. ஏ. செந்தில்வடி ... இவ்வைபவத்தில் பேசு...

கையில், வடபகுதியின் வரட்சியைப் போக்கத் தொடர்ந்தும் மரங்களை நாட்டி நாட்டை அபிவிருத்தியடையச்செய்தல் வேண்டும் எனக் கூறினார்.

அராலி தெற்கு-கிழக்கு கிராமசேவை அலுவலர் திரு மு. ஒப்பிலாமணி, பொருளாளர் திரு க. இரத்தினசிங்கம் ஆகியோரும் பேசினர். (அ)

## இந்திரா தமிழகம் வருகிறார்

(சென்னை)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் தி. மு. க. இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்ய இம்மாதம் நடுப்பகுதியில் தமிழகம் வருகிறார்.

இத்தகவலை மத்திய விவசாய எஸ்டேட் அமைச்சர் திரு ஆர் வி சாமிநாதன் தெரிவித்தார்.

"வாசிகசாலைகள்

# சாதிக்கொடுமைக்கு சாவுமணி அடிக்கமுன்வர வேண்டும்"

-யாழ். மேயர்

(கொண்டாவில்)

"சமபந்தி அமைப்பு போன்ற முறைகளைப் பின்பற்றி சாதிக்கொடுமைக்கு சாவுமணி அடிக்க வாசிகசாலைகள் முன்வரவேண்டும். அவர்கள் மேற்கொள்கின்ற சிரமதான மூலமான அபிவிருத்தி எமது இனத்தின் விடுதலைக்கும் அபிவிருத்திக்கும் வழி சமைக்கும். இன்று நந்தாவில் அம்மன்கோவில் சிறுபான்மையினருக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. இது நந்தாவில் இளைஞர்களின் ஒற்றுமையையே எடுத்துக் காட்டுகின்றது.

"மேற்கண்டவாறு யாழ் நகர முதல்வர் திரு இராஜா விஸ்வநாதன் குறிப்பிட்டார். கொக்குவில் கிழக்கு நந்தாவில் ஞானமணி சனசமூக நிலைய 35-வது ஆண்டு விழாவை யொட்டி நடைபெற்ற ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் கலந்துகொண்டார். தலைவர் திரு. தருமலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய முதல்வர் கூறியதாவது:

"இன்று யாழ் நகரில் நீர் வேண்டி 247 பேர் விண்ணப்பித்துள்ளார்கள். இவர்களுக்கு இதனை உடன் வழங்க முடியாத நிலையில் இருக்கின்றோம் எதிர்காலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படலாம். இன்று எமது பகுதிக்கு ஐந்து லட்சம் கலன் நீர் தேவைப்படுகின்றது. ஆனால் மூன்று லட்சம் கலன் நீரைக்கொண்டே இதனைப் பூர்த்தி செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றோம். முக்கியமாக கரையூர், பொம்மைவெளி போன்ற பகுதிகளில் நீர் விநியோகம் குறிப்பிட்ட நேரத்தைக் கொண்டே வழங்கப்படுகின்றது. இம்முறை அவர்களுக்கு கஷ்டம் எனபதை உணர்கின்றோம். ஆனால் இதனை எதிர் காலத்தில் இருக்க வழி செய்கின்றேன்.

"நீர் வீண் விரயம் செய்யப்படுவதை உடன் தடை செய்யவேண்டும். வாசிகசாலைகள் போன்ற சமூக நலன் புரி இயக்கங்களில் உள்ளவர்கள் சிரமதானம் மூலம் தங்கள் பகுதிகளிலுள்ள குளங்கள் முதலிய நீர்த்தேக்கங்களை சிரமதானம் மூலம் சீர்திருத்தி அமைக்க முன்வரவேண்டும். இதுமாத்திரமன்றி எமது பகுதிகளில் உள்ள மயானங்கள் துப்பரவு செய்யப்படாது புதர்மண்டிய நிலையில் காணப்படுகின்றன. இந்நிலைகளை அவ்வப்பகுதி இளைஞர்கள் முன்வந்து துப்பரவு செய்ய வேண்டும்." (அ)

# கணவனுடன் வாக்குவாதம்: இளம்மனைவி தற்கொலை

(புலோலி)

கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தினால் மனமுடைந்த மனைவி நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

புலோலி தெற்கைச் சேர்ந்த பாலகிருஷ்ணபிள்ளை இலட்சுமிதேவி (வயது 30) என்ற மூன்று பிள்ளைகளின் தாயான கர்ப்பிணிப் பெண்ணே நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டவராவர். வடமராட்சிப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. தி வேலுப்பிள்ளை விசாரணை நடத்தினார் பருத்தித்துறைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் வீரசேகரா சாட்சியங்களை ஆஜர் செய்தார்.

இறந்தவரின் கணவன் கணபதிப்பிள்ளை பாலகிருஷ்ணபிள்ளை சாட்சியமளிக்கையில் சம்பவதினம் வீட்டில் மூலையல் சம்பந்தமாக எனக்கும் மனைவிக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது பின்னர் சற்று நேரத்தில் பின் தோட்டட்பாவனைக்கு வைக்கப்பட்டிருந்த மருந்தை எனது மனைவி எடுத்துக் குடித்து விட்டதாக அறிந்தேன் இதனையடுத்து உடன் ஆஸ்பத்திரிக்கு அவரை எடுத்துச் சென்றும் அவர் இறந்து விட்டார்.

இறந்தவரின் தந்தையுடன் சகோதரன் சுபேந்திரனும் சாட்சியமளித்தார்.

டாக்டர் திருமதி இராஜேஸ்வரி ஆனந்தகுமாரசாமி பிரேதபரிசோதனையை மேற்கொண்ட மந்திகை அரசினர் வைத்தியசாலை பிரதம டாக்டர் எஸ். ஜி. ஆதர் ஆகியோரின் சாட்சியங்களை அடுத்து தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ

# 5 பேர் மட்டுமே சித்தி

(கொண்டாவில்)

கணக்கியல் தகுதித்தேர்வு இறுதியாண்டு பரீட்சைகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் இருந்து 31 பேர் தோற்றியிருந்தார்கள். இவர்களில் 5 பேர்மட்டுமே இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் சித்தியடையத் தவறியவர்களில் 25 பேர் ஒரே பாடத்தில் சித்தியடையத் தவறி உள்ளனர். பொது நிதியியல் என்னும் பாடத்தில் இம்மாணவர்கள் சித்தியடையத்தவறியமையினால் 9 மாணவர்கள் மூன்று பாடங்களில் சித்தி அடைந்தும் பூரண சித்தி அடைய முடியாத நிலையில் காணப்படுகின்றனர். (அ)

# இ. காங்கிரஸ் வேட்பாளர் போட்டியில்லா தெரிவு

புதுடில்லி, மே 4

மகாராஷ்டிர மாநில சட்டசபைக்கான தேர்தலில் இந்திராகாங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குரேஞ்ஸா தொகுதியில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த திரு. ஆர் பி. தலண்டே என்பவரே போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டவராவார்.

இத்தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்த சுயேட்சை வேட்பாளரின் மனுநிராகரிக்கப்பட்டதை அடுத்தே இவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (கு)

## தாய்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

சவடித்துத் தோட்டத்திற்குச் சென்று புல்லுப்பிடுங்கி வருமாறு கூறியதாகவும், அதையடுத்து தோட்டத்திற்குச் சென்ற ரவீந்திரன் அங்கு இருந்த நஞ்சை அருந்தியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாட்சியத்தையடுத்து தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)


நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபட

ஷெல்ரொக்ஸ் நுளம்புச் சுருள்கள்

மீண்டும் வந்துவிட்டன.



சுகமான நித்திரையை மீண்டும் அனுபவிக்க ஷெல்ரொக்ஸ் நுளம்புச் சுருள்கள்.

நுளம்பு மற்றும் பறக்கும் பூச்சிகளை ஷெல்ரொக்ஸ் நுளம்புச் சுருள்கள் அகற்றிவிடுகின்றன.

ஷெல்ரொக்ஸ் நுளம்புச் சுருள்களின் உதவியுடன் நிம்மதியாக நித்திரை செய்யுங்கள்.

ஷெல்ரொக்ஸ்

நுளம்புச் சுருள்கள்

தயாரிப்பாளர்கள்:

கெம் சிலோன் லிமிட்டெட்.

760 - 762, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபுப் பிராந்தியத்தைக் கைப்பற்றக் அமெரிக்கா முயற்சி:

# எண்ணைக் கிடங்குகளை தகர்ப்போம்

## பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் எச்சரிக்கை

குவைத், மே. 4

மத்திய கிழக்குப் பிராந்தியத்தை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருமானால் அரபுநாடுகளின் எண்ணைக் கிடங்குகளைத் தகர்த்துவிடப்போவதாக பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜஹறப் ஐஸார் அரபாத் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் கைப்பற்றியுள்ள பாலஸ்தீனர்களை வெளியேற்ற அரபு மண்ணின் ஜோர்டான் நிலைதையும் ஜஹறப் அரபாத் ஆற்றின் மேற்குக் கரையோ வன்மையாகக் கண்டித்தார். ரத்தில் உள்ள பூகக் குடி தமது இயக்கத்திற்கு ஆதரவு தேடு மூகமாக குவைத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் ஜஹறப் அரபாத் நிருபர்கள் மத்தியில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

மத்தியகிழக்குப் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்து இறங்குமானால் அரபுநாடுகளின் சொந்தமான எண்ணைக் கிணறுகளைத் தகர்த்து அமெரிக்காவுக்கு எண்ணை கிடைக்காது செய்ய தன்னால் முடியும் என்றும் அவர் கூறினார். (கு)

# ஒன்றரை லட்சம் பீடி இலை கடத்தல் முறியடிப்பு!

## ஆறுபேருக்கு அபராதம்; லொறி பாதுகாப்பில்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட ஒன்றரை லட்சம் பெறுமதியான 3 மூடை பீடி இலைகளும் 2 பொதி புடைவை வகைகளையும் காரைநகர் கடற்படையினர் ஒரு லொறியிலிருந்து கைப்பற்றினர்.

காரைநகர் கடற்படையினர் கைப்பற்றப்பட்ட இக்கடத்தல் பொருட்கள் யாழ் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டு லொறியில் வந்த ஆறு பேருக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் மேல் விசாரணைக்காக லொறியும் கடத்தல் பொருட்களும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

சுங்கசப் கலக்டர் திரு. ஏ. பரம்சோதி, சுங்க அதிகாரிகளான திருவாளர்கள் இலக்பரேரா, ரி. ஆர் சிவம், எம். அசோகன் ஆகியோர் விசாரணை நடத்தினர். மேலதிக சுங்க சேகரிப்பாளர் அபராதம் விதித்தார். (கொ-இ)

# இ. காங்கிரஸ் மாணவர் அணி பகிஷ்கரிக்கும்

(சென்னை)

நடைபெறவிருக்கும் தமிழக சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் மாணவர் அணி பகிஷ்கரிக்கக் கூடுமென்று செங்கற்பட்டு மாவட்ட மாணவர் காங்கிரஸ் தலைவரும் மாநில மாணவர் காங்கிரஸ் நிர்வாகக் குழு உறுப்பினருமான திரு ராஜேந்திரன் தெரிவித்தார்.

திருவோணம், திருநெல்வேலி ஆகிய இரு தொகுதிகளையும் மாணவர் காங்கிரசுக்கு ஒதுக்க வேண்டும் என்று கோரியதை கட்சித் தலைமைப் பீடம் ஏற்கத்தவறியதையடுத்தே தாம் பகிஷ்கரிக்க விருப்பதாக அவர் கூறினார். (கு)

# அ. தி. மு.க. கூட்டத்தில் கல்வீச்சு

(வேலூர்)

வேலூரில் நடைபெற்ற அ தி மு. க. பொதுக் கூட்டமொன்றில் சோடாப் போத்தல்களும் கற்களும் மேடையை நோக்கி வீசப்பட்டதையடுத்து கூட்டம் இடைநடுவில் குழம்பியது.

முன்னாள் சட்டசபை உறுப்பினர்களான திரு. ஏ. கே. அரங்கநாதன், திரு. ஐ. ரிவேலன் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தபோதே சோடாப்போத்தல்கள் வீசப்பட்டன (கு)

# லண்டன் பணயக்கைதிகள் இருவர் விடுதலை! ஒருவர் கர்ப்பிணி

## பிரச்னையைத் தீர்க்க அரபுநாடுகளுக்கு வேண்டுகோள்

லண்டன், மே 4

லண்டனிலுள்ள ஈரான் தூதரகத்தில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் உட்பட இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

தூதரகத்தைக் கைப்பற்றியுள்ள ஆயுதம் தாங்கிய ஐந்து இளைஞர்களும் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க தமக்கு உதவுமாறு அரபுநாடுகளையும் செஞ்சிலுவைச் சங்கத்தையும் கோரியிருக்கிறார்கள்.

நேற்று விடுதலை செய்யப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணின் கணவன் விடுத்த வேண்டுகோளையடுத்தே அவர் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பெண் விடுதலை செய்யப்பட்ட ஒரு மணிநேரத்தில் மற்றுமொரு ஈரானியர் விடுதலை செய்யப்பட்டார். (கு)

# நெடுஞ்செழியனை எதிர்த்து திருமதி ராசாத்தி

(சென்னை)

தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் அ. தி. மு. க பொதுச் செயலாளர் திரு. நெடுஞ்செழியனை எதிர்த்து நெல்லை தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் போட்டியிடுகிறார்.

சிறந்த பேச்சாளரான திருமதி குஞ்சிதபாதம் முன்னாள் சட்டசபை உறுப்பினராவார் (கு)

இ. காங்கிரஸ் தமிழக வேட்பாளர் பட்டியல்:

# கட்சி மாறிகளுக்கே இடம் கிடைத்திருக்கிறது!

## ஆதரவாளர்களிடையே அதிருப்தி

சென்னை, மே. 4

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலை இறுதியாகத் தயாரித்து கட்சித் தலைமைப்பீடம் வெளியிட்ட வேட்பாளர் பட்டியல் கட்சி ஆதரவாளரிடையே பெரும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியில் ஆரம்பகாலம் முதல் விசுவாசமாகப் பணிபுரிந்து வந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டு, கட்சிமாறிகளுக்கும், நெருக்கடியான நேரத்தில் கட்சி ஈடுபாட்டிலிருந்து ஒதுங்கியிருந்தவர்களுக்குமே டிக்கட் வழங்கியிருப்பதாகவும் கட்சியின் மூத்த தலைவர்களிடையே அதிருப்தி நிலவி வருகிறது.

குறிப்பாக மூத்த தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் தலைவராக இருந்து கட்சியை வளர்க்கத் தொடங்கிய காலத்திலிருந்து அவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் அனைவரும் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (கு)

# "அஸாம் பிரச்னைகள் மிகவும் சிக்கலானவை"

## பிரதமர் இந்திரா விளக்கம்

புதுடில்லி, மே 4

அஸாமில் வெளியார் பிரச்சனையை மனிதாபிமானத்துடன் நோக்கினால் அது மிகவும் சிக்கலானது என்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார்.

அஸாம் பிரச்னை தொடர்பாக புதுடில்லியில் நிருபர்களுக்களித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மத்திய அரசு அஸாம் பிரச்னை தொடர்பாக தெரிவித்துள்ள யோசனைகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றும் கூறிய திருமதி காந்தி அஸாமிலுள்ள வெளிநாட்டவரை அவர்களது நாட்டிற்கோ அல்லது வேறுநாடுகளுக்கோ அனுப்பிவைக்கத் தாம் ஒருபோதும் முன்வரப்போவதில்லை என்று திட்டவட்டமாகக் கூறினார்.

1971 ம் ஆண்டிற்குப்பின்னர் அங்குவந்து குடியேறிய வெளிநாட்டவர்களை நாடற்றவர்கள் என்று அறிவிக்கும்படி கிளர்ச்சியாளர்கள் கோரியிருப்பது குறித்து நிருபர் ஒருவர் கேட்டபோது அதுகுறித்து ஆராய தாம் தயாராகஇருப்பதாகக் குறிப்பிட்டவர் பெருந்தொகையான மக்கள் அவ்வாறு குடியேறியிருப்பதால் அது சாத்தியமானதாகத் தெரியவில்லை என்றார்.

# 9 மாநிலங்களிலும் 406 வேட்புமனுக்கள் நிராகரிப்பு!

புதுடில்லி, மே 4

இம்மாதக் கடைசியில் நடைபெறவுள்ள 9 மாநில சட்டசபைகளுக்கான தேர்தலில் போட்டியிட வேட்பு மனுக்களை தாக்கல் செய்த வேட்பாளர்களில் 406 பேரின் வேட்பு மனுக்கள் நேற்று நிராகரிக்கப்பட்டன.

மகாராஷ்டிரத்திலேயே மிகக் கூடுதலான அளவில் 200 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன தமிழ்நாட்டில் 29 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. வேட்பு மனுக்களை வேட்பாளர்கள் தாமாகவே விலக்கிக்கொள்ளும் இறுதித்தினம் இன்றுகும்.

# ஆண்டிபட்டியில் எம்.ஜி ஆர். வேட்பு மனு வாபஸ்!

சென்னை, மே 4

அ தி மு க தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஆண்டிப்பட்டித் தொகுதியில் நேற்று தாக்கல் செய்திருந்த தமது வேட்பு மனுவை இன்று வாபஸ் பெற்றுக்கொண்டார்.

மதுரை மாவட்டத்தில் உள்ள மதுரை மேற்கு, ஆண்டிப்பட்டி ஆகிய தொகுதிகளில் திரு. இராமச்சந்திரன் தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்களில் ஒன்றையே நேற்று வாபஸ் பெற்றுக்கொண்டார்.

அவர் வேட்பு மனுவை வாபஸ் பெற்ற ஆண்டிப்பட்டித் தொகுதியில் அ தி மு க சார்பில் திரைப்பட நடிகர் திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் போட்டியிடுகின்றார், இவரை எதிர்த்து இ. காங்கிரஸ் சார்பில் திரு பொன்முத்துராமலிங்கம் போட்டியிடுகிறார். (இ)

# மணிப்பூரில் அமைதி

(இம்பால்)

வெளியார் பிரச்சனை தொடர்பாக மணிப்பூரில் ஏற்பட்டிருந்த பதட்டநிலை தணிந்துவிட்டபோதிலும் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலிலிருந்து வருகிறது.

வன்முறைச்சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறுத [illegible] பொலிசார் ரோந்து [illegible] வருகின்றனர். (கு)

## வவனியா......

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

அரசியல் கைதிகளாக காவலில் வைத்தார்கள். அந்த வீட்டுக்கு என்னைக் கொண்டுபோனவுடனே எனது மனைவி, குழந்தைகளையும் கொண்டு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். அப்பொழுது திரு. அமிர்தலிங்கத்தின் குடும்பம் யாழ்ப்பாணம் சப்பல் வீதியில் இருந்தது எனது குடும்பத்தின் நிலையைக் கண்ட திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தனது வீட்டிலே எனது மனைவியையும் குழந்தைகளையும் இருக்கச் செய்துவிட்டு மூளாய்க்குத் தனது பெற்றோர்களிடம்போய் விட்டார். இரண்டொரு மாதங்களுக்குப் பிறகு திரு செல்வநாயகம் தனது சகாக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக பிரதமருக்கு எழுதி அனுமதிகேட்டிருந்தார். அதன் பயனாகஸ்டன் மோரிகிரசன்ட் வீட்டில் வைக்கப்பட்டிருந்த நாங்கள் 7பேர், செனற்றர் நல்லையா, திருவாளர்கள் வன்னியசிங்கம், வி. என் நவரத்தினம், இராஜவரோதயம், இராசதுரை, அமிர்தலிங்கம் நான் ஆகிய எல்லோரையும் பொலிஸ் காவலோடு திரு செல்வநாயகம் வீட்டுக்கு கொண்டு போனார்கள் அதே மாதிரி டாக்டர் நாகநாதனும் திரு வி ஏ கந்தையாவும் கொண்டுவரப்பட்டிருந்தார்கள் வவனியா மாநாட்டைப் பற்றிப் பேசக்கூடிய நிலையில் அன்றுதான் நாங்கள் எல்லோரும் முதன்முறையாக சந்திக்கிறோம். அப்பொழுது தான் திரு செல்வநாயகம் சொன்னார் "உங்கள் தீர்மானம் எவ்வளவு சரி என்பதை பின்புதான் உணர்ந்தேன் எனது ராஜினாமா கடிதத்தை பிரதமருக்கு அனுப்பிப்போட்டேன்" என்றார்

(நாளை முடியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்நகர்) தினசரி 3-45, 6-45, 9-45 சனி, ஞாயிறு 3-45 ரேவதி - சுஜாதா தீபம் (சனி - புதியபிரதி)

வெலிங்டன் (காங்கேசன்) தினசரி 3-30, 6-30, 9-30 சனி, ஞாயிறு 3-30 ராஜன் - புஷ்பலதா பூவும் பொட்டும்

மனோஹரா A (சுன்னாகம்) தினசரி 4 காட்சிகள் முத்துராமன் • சுஜாதா நடித்த மயங்குகிறாள் ஒருமாது

Coming soon
The Living Desert

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-30 சரோஜாதேவி எம். ஜி. ஆர். நடித்த பாகப் பிரிவினை

லிடோ (யாழ்ப்பாணம்) போன்: 7898 தினசரி 4 காட்சிகள் மரகதம் (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர்-அசோகன்-ராஜேஷ்-ஜெயலலிதா-ஜெயசித்ரா நடித்த V. R. ரத்தத்தின் ரத்தமே (வண்ணக்கலவை) டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) டெலிபோன்: 408 தினசரி 5 காட்சிகள் 10-30, 1-30, 4-30, 7-15, 10-00 சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி நடித்த நிறம் மாறாத பூக்கள் (வண்ணப்படம்)

SANTHI JAFFNA Phone 7642 Daily 10-30, 2-30, 6-45, 7-00 & 9-30 p.m.
ஜனத்திரள் நிறைந்த 2வது வாரம்! ... THE LOVE AND TIMES OF SCARAMOUCHE

ராணி (யாழ்நகர்)
கொட்டகை நிறைந்த காட்சிகள்
✶ கமலஹாசன் (இருவேடங்களில்)
✶ ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
கல்யாண ராமன்
காட்சிநேரங்களை குறிப்பிட முடியாமைக்கு வருந்துகின்றோம்.

இன்று மட்டும்
ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
✶ மரிக்கார் ராம்தாஸ் ✶ அப்புக்குட்டி ராஜகோபால்
★ உபாலி செல்வசேகரன்
மற்றும் பலர் நடித்த
கோமாளிகள் (புதிய பிரதி)
குறிப்பு:
1978-ம் ஆண்டு எம். ஜி. ஆர். தலைமையில் நடைபெற்ற திரைப்பட விழாவில் சகல நடிக, நடிகைகளும் பங்குபற்றிய செய்திச்சுருளும் காண்பிக்கப்படும். எம். ஜி. ஆர், ராஜா படமாளிகைக்கு விஜயம் செய்துள்ளார். முதல் மந்திரியாக, இந்திய திரைப்பட விழாமூலம் உங்கள் நெடுநாள் ஆவலைப் பூர்த்தி செய்யக் காட்சி தருகின்றார்.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
6-5-80 நாளை முதல்
THE PRESIDENT MAN
(Scope-Color)


# இன்றைய பலன்

சித்திரை மாதம் 22-ந்திகதி (5-5-80) திங்கட்கிழமை

மேடம்:- உள்ளத்தில் உவகைதிகுந்து உறவினர்களுடன் ஒருமை வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும் மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும் எதிலும் புதுமையைக் காணவிருப்புவீர்கள்.

இடபம்: தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும் நண்பர்களே காலை வாரி விடக்கூடும் சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம் சிறப்பான தினம்.

மிதுனம்: மனதுக்கு மகிழ்ச்சியைத்தரும் சம்பவங்கள் இடம்பெறும் குடும்ப வாழ்க்கையில் தென்றல் வீசும் தொழில்துறையிலும் புதிய வாய்ப்புக்கு இடமுண்டு பெரியோர்களின் ஆதரவும் தகுருது கிடைக்கும்.

கடகம்: குறைகேட்க நேரிடும் கடமையில் தடை தோன்றும் நஷ்டத்துக்கு இடமுண்டு நாவடக்கம் நன்று.

சிங்கம்: தெளிந்த மனம் தெய்வ குரு பக்தியுடன் தேடியதும் கிடைக்கும். பரோபகாரச்சிந்தை வளரும் பொதுப்பணியை நாடுவீர்கள்.

கன்னி: தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்துக்கு வழிகோலப்படலாம் இதன்மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம் போட்டி காண்பதற்கு ஏற்ற தினம்.

துலாம்: பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழிகோலப்படும் சிலருக்கு புதிதாகத் தொழில் கிடைக்கக்கூடும் வருவாயும் வளரும்.

விருட்சம்: உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும் பணவிவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம் தொழில் துறையில் அதிகம் கவனம் செலுத்தவும்.

தனு: வாழ்க்கையில் சிரமங்கள் அதிகரிக்கும் குறுக்கு வழியில் இறங்குவதால் வழக்கு விவகாரங்களில் சிக்கிக் கொள்ள நேரிடலாம் அதிகம் பேச்சைத் தவிர்த்து அமைதியுடன் இருக்கவும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை நன்று.

மகரம்: இல்லத்தில் இன்று இனிமையான சம்பவங்கள் இடம் பெறலாம். வாக்குவன்மையின் பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும் சிலர் வாழ்க்கையில் அதிஷ்ட இலாபங்களுக்கு இடமுண்டு.

கும்பம்: பக்கத்திலே பகுதி தோன்றுவதற்கு எதிரிகள் முனைவர் பணவிவகாரத்தில் மோசடி நடக்கலாம் ஆணவப் போக்கினால் ஆபத்துக்கள் ஏற்படலாம் அடக்கம் வேண்டும்.

மீனம்: பாதையில் பழுதுண்டு பகைவர்கள் காத்திருப்பர் செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும் சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்படலாம் உணவு விஷயத்தில் கவனம் தேவை.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## வீதியமைப்பு

(நெல்லியடி)

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள வரணி—விராலி வீதி சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இவ்வீதி அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினத்தால் நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வீதி அமைக்கப்படுவதனால் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள அந்தணன் திடல் பகுதியும் சாவகச்சேரித் தொகுதியிலுள்ள வரணிப்பகுதியும் இணைக்கப்படுகின்றது.


ஹரன் (வல்வெட்டித்துறை) தினசரி 4 காட்சிகள் எஸ் எஸ். ஆர்-விஜயகுமாரி நடித்த கருணாநிதியின் பூமாலை (புதியபிரதி)


யாழ். தொலைபேசி நிலைய

# பெண் ஊழியர்கள் 'ஓவர்டைம்' செய்யமறுப்பு?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் பணிபுரியும் பெண் தொலைபேசி இயக்குநர்கள் மேலதிக நேர வேலை செய்ய மறுத்து வருகின்றனர் என்றும் இதனைடுத்து பகலில் தொலைபேசி அழைப்புக்களையும் பெறுவதில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிகிறது.

இவ்விவகாரம் குறித்துச்சமரசம் ஏற்படுத்தும் பொருட்டு நேற்று யாழ் தபால்நிலைய உயர் அதிகாரிகள் பெண் ஊழியர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதிலும் அவர்களது முயற்சி பலனளிக்கவில்லை என்றும் தெரிகிறது.

## பொத்துவில் எம். பி. பதவி

# தொகுதி மக்களின் கருத்தை அறிய அமைச்சர்கள் வருவர்

(மட்டக்களப்பு)

ஆனமடுவ தொகுதி இடைத்தேர்தல் முடிவடைந்தபின்னரே அமரர் கனகரத்தினத்திற்கு பதிலாக பொத்துவில் தொகுதியின் புதிய பாராளுமன்ற உறுப்பினரை ஐக்கிய தேசியக் கட்சி தெரிவுசெய்யும் என அறிவிக்கப்படுகின்றது.

இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியின் மேலிடத்திற்கு பலரின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆதரவாளர்கள் இன்னாரை தெரிவு செய்யவேண்டுமென தந்திகள் மகஜர்களை அனுப்பிவண்ணம் உள்ளனர். இதுவரை எட்டு பேருக்கு மேலானவர்களின் பெயர்கள் பரவலாக அடிபடுகின்றன.

காலஞ்சென்ற கனகரத்தினத்தின் சகோதரியான திருமதி த. பதமநாதன் அக்கரைப்பற்றை பிறப்பிடமாகக் கொண்டவரும் ஐக்கிய தேசிய கட்சி நீண்டகால உறுப்பினருமான காகித ஆலை கூட்டுத்தாபனத் தலைவர் திரு. வை. ஜி. எட்வேட் காரைதீவைச் சேர்ந்தவரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எம். செல்வரத்தினம், அக்கரைப்பற்று பிரபல வர்த்தகரான திரு. என். சோமசுந்தரம் காரைதீவு முன்னாள் கிராமசபைத் தலைவரும், ஓய்வுபெற்ற அதிபருமானதிரு எம் விநாயகமூர்த்தி, பிரபல சட்டத்தரணி கடந்த பொதுத் தேர்தலில் கல்முனையில் சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு. துரையப்பா முத்துக்கிருஷ்ணன் ஓய்வு பெற்ற தலைமையாசிரியரும் திருக்கோவிலை சேர்ந்தவருமான திரு. ஆ. நடராசா நான்கு தடவை பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்விகண்டவரும், திருக்கோவில் கிராமசபை பாஜி தலைவருமான திரு, நடராஜா தர்மலிங்கம் ஆகியோரின் பெயர்கள் தற்போது பரவலாக அடிபடுகின்றன.

அமரர் கனகரத்தினத்தின் இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமானவர். அவரின் சகோதரியான திருமதி த. பத்மநாதனே என அநேக ஆதரவாளர்கள் விரும்புவதாகத் தெரிகிறது.

பொத்துவில் மக்களுடன் நெருங்கிப் பழகிய திருமதி பத்மநாதன் அமரர் கனகரத்தினத்தின் அந்தரங்க காரியதரிசியாக கடமை புரிந்தமையினால் அவரால் தான் திரு கனகரத்தினம் மேற்கொண்ட திட்டங்களை அமுல் நடத்த முடியும் என தொகுதி மக்கள் நம்பிக்கைகொண்டுள்ளதாகவும் தெரிகிறது.

இது இவ்வாறிருக்க புதிய எம். பி. யாக யாரை நியமிப்பது என்பது குறித்து மக்களின் அபிப்பிராயங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு அமைச்சர்கள்சிலரும் சிரேஷ்ட ஐ. தே. க. உறுப்பினர்கள் சிலரும் விரைவில் பொத்துவிலுக்கு விஜயம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## வானொலியில் நந்தனார் இசைச் சித்திரம்

(கொழும்பு)

இலங்கை வானொலி தமிழ்ச் சேவை ஒன்றில் இன்று 5ம் திகதி 9-45மணிக்கு "ப வசமூட்டும் பக்திப் பாடல் தந்து புகழ் பெற்ற பக்த நந்தனார்' என்ற சிறப்பு இசைச் சித்திரத்தின் முதலாம் அங்கம் ஒலிபரப்பாகிறது.

திரு. க. நடேசோதி எழுதியுள்ள இவ்விசைச் சித்திரத்திற்கு சங்கீத பூஷணம் எம். ஏ. குலசீலநாதன் தயாரித்துளிக்கிறார். (கு)

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

(ஊர்காவற்றுறை)

சரம்பன் மேற்கு சனசமூக நிலையப் பொதுக்கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வி. பெரியதம்பி, உப தலைவர்: இ. சுப்பையா, செயலாளர்: சி. சிறீதரன், உப செயலாளர்கள்: ச. சிவநாதன், இ. சிறீபவன், க. நாகரூபன், பொருளாளர்: சி. தர்மலிங்கம், உப பொருளாளர்: பொ. பேரம்பலம். காப்பாளர்கள்: இ. மாணிக்கம், சிவதர்மவளளல் எ. கனகராசா, கணக்காய்வாளர்: க. ஸ்ரீரங்கநாதன், சி. தனஞ்சயன் நிர்வாக சபைக்கு 8பேர் தெரிவு செய்யப்பட்டனர். (கு)

## மாதர் கி. அ. சங்கத்திற்கு இலவசமாக தையல் மெஷின்

(பட்டத்தரிப்பு)

பொன்னாலை — நெல்லியான் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு கிராம அபிவிருத்தித் திணைக்களம் மூலம் தையல் மெஷின்களை இலவசமாக வழங்கியுள்ளது.

வலி மேற்கு பிரிவு கிராம அபிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். இராசரத்தினம் இதற்கான ஒழுங்குகளை செய்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)

சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.

SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)



# ஈழநாடு The EELANAADU

50 சதம்


## சீனாவில் ஸியாவுல்ஹக்

(பீகிங்)

சீனாவுக்குவிஜயம்செய்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாவுல் ஹக் சீனத்தலைவர்களுடன் நேற்று இரண்டாவது சுற்று பேச்சுக்களை நடத்தினார்.

இன்று சீனப் பிரதமரைச் சந்திப்பார்.

மூன்றாவது சுற்றுப்பேச்சு இவ்வாரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING



யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...

டில்கா வாச்வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி.
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## சிறந்த சாரதி, சிறந்த நடத்துநர் போட்டி

### பரிசுபெறுவோருக்கு பல பரிசுகள்!

(யாழ்ப்பாணம்)

"வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமக்களுக்குச் சேவைசெய்வதையே தனியாய நோக்கமாகக் கொண்டது என்பதை, சாரதிகளும் நடத்துனர்களும் புரிந்து கொண்டு சேவையாற்ற வேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காக சிறந்த சாரதி, சிறந்த நடத்துனர்களை தெரிசெய்வது சம்பந்தமான போட்டி நடைபெறவுள்ளது"

இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் வ.போ.ச. தலைவர் திரு டட்லி குணசேகரா பேசுகையில் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் வ.போ.ச. உயர் அதிகாரிகளும் பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர். திரு குணசேகரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"யாழ் ரோட்டரிக் கழகம், 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவுடன் நடாத்தப்படும் இப்போட்டி சிறப்பு அம்சங்களான விளையாட்டுப் போட்டிகள், கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகியவையும் இடம் பெறவுள்ளன

**தங்கப்பதக்கம்**

சிறந்த 3 சாரதிகளுக்கும் சிறந்த 3 நடத்துநர்கள் ஒவ்வொருவருக்கும் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கங்கள் வழங்கப்படுவதோடு, வெற்றிக்கிண்ணங்களும், சான்றிதழ்களும் யாழ் ரோட்டரிக் கழகத்தால் வழங்கப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் சிறந்த சாரதிகளையும், சிறந்த நடாத்துனர்களையும், சென்னை சென்று, சென்னை போக்குவரத்து நிறுவனம் எவ்வாறு இயங்குகின்றது என்பது பற்றி அறிந்து மீள்வதற்குரிய பயணங்களை இலவசமாக மேற்கொள்ள உரித்துடையவராவர். இவ்வைபவத்தை மேலும் சிறப்புடன் கொண்டாடுவதற்காகப் பின்வரும் நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்படும்.

சிறந்த சாரதிகள், சிறந்த நடாத்துநர்கள் (அதாவது முதலாவது இரண்டாவது, மூன்றாவது) பெயர்கள் அறிவிப்பு,

கைபந்தாட்டம், காற்பந்தாட்டம், கரம் ஆட்டம் ஆகிய விளையாட்டில் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் அறிவிப்பு.

சாலைகளில் சிறந்த 'நாடகத்தை தெரிவு செய்வது.

சாலை விநோத உடைப் போட்டி.

சிறந்த சாரதி, சிறந்த நடாத்துநரைத் தெரிவு செய்வதற்கு வாக்களித்தவர்களிலிருந்து திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் மூவருக்குப் பரிசுகள் வழங்கல், 1ம் பரிசு 500 ரூபா, 2ம் பரிசு 250 ரூபா, மூன்றும் பரிசு 100 ரூபா.

கட்டுரைப்போட்டி! "பஸ் முகப்படுத்தலின் பின்னர் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின்முன்னேற்றம்" என்ற தலைப்பில் சபையின் எந்த ஊழியரும் கட்டுரை அனுப்பலாம். சிறந்த கட்டுரை 1980-6-15ம் திகதி வெளியிடப்படும் நினைவு மலரில் பிரசுரிக்கப்படுவதோடு சிறந்த கட்டுரையாளருக்கு 100ரூபா பரிசும் வழங்கப்படும்.

உள்ளூர்க் கலைஞர்கள் அளிக்கும் களியாட்ட நிகழ்ச்சிகள்.

1980-04-30 முதல் 1980-06-10 வரை சாரதிகள், நடாத்துநர்கள் நேர்த்தியாக உடையணிந்து துப்பரவாக முகச்சவரம் செய்து மக்களுக்குச் சேவையாற்றுவதுடன், நடாத்துநர்கள் தமது இலக்கத் தகடுகளை நன்கு மினுக்கி அணிதல் வேண்டும். 'சிறந்த சாரதிகளைப் பயணிகள் தெரிவு தந்து உதவுமுகமாக அவர்களின் பெயர் சம்பள இலக்கம்போன்ற விபரங்கள் அடங்கிய 12"×6" அளவிலான அட்டைகளைத் தங்களுடன் கொண்டு செல்லுமாறு சாரதிகளுக்குட் மதிப்புரை வழங்கப்படுகின்றது. இந்நன்னாளைவிசேட முக்கியத்துவம்வாய்ந்த நாளாகக் கருதுமாறு எல்லா ஊழியர்களையும் சாலை அத்தியட்சகர்கள் கேட்டுக்கொள்ளவேண்டும்.

### "ஈழநாடு" கூப்பன்

"ஈழநாடு" பத்திரிகையில் பிரசுரமாகும் கூப்பனில் அனுப்பப்படும் பொதுமக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பின்படி, பயணிகள் சிறந்த 3 சாரதிகளையும், 3 நடாத்துநர்களையும் தெரிவுசெய்யும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. சிறந்த சாரதிகளையும் நடாத்துனர்களையும் தெரிவு செய்யும்போது மக்கள் வாக்கெடுப்பில் அவர்கள் பெற்ற வாக்குகளுக்கேற்ப புள்ளிகள் அளிக்கப்படுவதுடன், சபையின் சேவையில் அவர்களின் செயல்திறனுக்கும் புள்ளிகள் அளிக்கப்படும். சிறந்த சாரதிகள், சிறந்த நடாத்துநர்கள் யார் என்ற இறுதித்தீர்மானம் குழுவொன்றினால் செய்யப்படும். இக் குழுவில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் அலுவலர்களும், ரோட்டரிக் கழகத்தைச் சேர்ந்த மூவரும், "ஈழநாடு" பத்திரிகைப் பிரதிநிதி ஒருவரும் அடங்குவர். 1980-06-15ஆந் திகதி வடபிராந்திய போக்குவரத்துச்சபைதொடங்கியபின் இரண்டாவது ஆண்டு நிறைவுநாளாக இருப்பதால் வெற்றிபெற்றவர்களின் பெயர்களை இத் தினத்தன்று அறிவித்து உரியமுறையில் அவர்களுக்குரித்தான பரிசுகள் வழங்கப்படும். வாக்கெடுப்பிற்கான கூப்பன்கள் 1980-04-30 முதல் 1980-06-10 வரை "ஈழநாடு" இதழில் வெளியிடப்படும். (கொ)

## இன்று

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தவித்தியாசாலை சங்கக் கட்டிடத் திறப்புவிழா, இன்று பாடசாலை அதிபர் திரு. என். ஏ.நாகரத்தினம் தலைமையில் நடைபெறும். வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு சங்கக் கட்டிடத்தை திறந்துவைப்பார். வட்டாரக் கல்வியதிகாரி திரு. ப. சண்முகராசா, திரு. சி. மருதபிள்ளை, திரு. சி. கனகநாயகம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றுவார்கள். இவ்விழாவில் திரு. சி. நடராசா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார். (வெ)

## நஞ்சருந்தி இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வேலைக்குச் செல்லும்படி கூறியதால் மனமுடைந்த யுவதி, ருக்மிநாசினி அருந்த மரணமான சம்பவம் தாவடியில் நிகழ்ந்தது.

மரணமான பொன்னன் சரஸ்தியின் (23 வயது) மரண விசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

மரணமானவரின் தாய் பொன்னன் ஆச்சிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது,

"எனது மகள் மானிப்பாயிலுள்ள கற்பூரத் தொழிற்சாலையில் வேலைசெய்து வந்தார். கடந்த சில நாட்களாக அவர் வேலைக்குச் செல்லவில்லை. சம்பவதினம்காலை அவரை வேலைக்குச் செல்லும்படி கூறினேன். ஐயா இருந்தால்என்னை வேலைக்குப் போகச் சொல்லுவாரா? ஐயா இல்லாதபடியால்தானே என்னை வேலைக்குப்போகுமாறு கூறுகிறுப் என்று கூறினார். எங்கள் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. பின் நான் வேலைக்குப் புறப்பட்டேன். அப்போது அவர் வீட்டில் இருந்த ருமிநாசினிப்போத்தலைஎடுத்து குடித்துவிட்டு வாந்தியெடுத்தார். உடனடியாக முதலுதவி அளித்தோம். பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம். அவர் இறந்துவிட்டார்" என்று கூறினார்.

மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். ஆனைக்கோட்டை பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (கா)

## எள்ளுமூடை மோசடி

(யாழ்ப்பாணம்)

சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான எள்ளுமூடைகளை மோசடி செய்ததாகக் கூறப்படும் ஒருவரை பொலிசார் தேடிவருகின்றனர்.

யாழ். மானிப்பாய் வீதியைச் சேர்ந்த எஸ். வி. கறுப்பையா என்பவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் தாக்கல் செய்த புகாரில் "மானிப்பாய் வீதியில் லொறி போக்குவரத்துசேவை நடத்தும் கிருஷ்ணமூர்த்திஎன்பவரிடம் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான முப்பத்தெட்டு எள்ளுப் புண்ணாக்கு மூடைகளை நான் கொடுத்த விலாசத்தில் சேர்க்கும்படிகூறி மற்படி மூடைகளை அவரிடம் கொடுத்தேன் அவர் அந்த மூடைகளை உரியவரிடம் சேர்க்காது மோசடிசெய்துவிட்டார்" என்று தெரிவித்துள்ளார். மோசடிசெய்ததாகப் புகார்செய்யப்பட்ட கிருஷ்ணமூர்த்தியை யாழ். விசேட குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் சி நடராசா தேடிவருகிறார். சந்தேகநபர் தலைமறைவாகிவிட்டார் எனவும், அவர் இதற்கு முன்பும் இருநூற்றி இருபத்திஐந்து சீமெந்து மூடைகளை மோசடி செய்ததாக யாழ் நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டு ஐயாயிரம் ரூபா பிணையில் விடப்பட்டுள்ளார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (கொ)

## பரீத் நவீர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவரின் சாதனையை முறியடித்த ஜலப் பரீத் நவீர் தொடர்ந்து 18 மணி 15 நிமிடங்கள், கைதட்டி நடனமாடியுள்ளார். வவனியா லயன்ஸ் கழகத்தினர் இச்சாதனை நிகழ்ச்சிக்கு நடுவர்களாகக் கடமையாற்றினர். (வெ)


மக்கினொன் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154

பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!


## மரண அறிவித்தல்

### கந்தையா இராசநாயகம்

கந்தையா இராசநாயகம் காலமானார். இவர் காலஞ்சென்ற தபாலதிபரும், சமாதான நீதவானுமாகிய ஏ எஸ். கந்தையா சிதம்பரம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை, நாகம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், பொன்மலரின் அன்புத் தந்தையாரும், ஏ. எஸ். சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், யாழ்ப்பாணம், எழுதுமட்டுவாள், பெற்றோல் நிரப்பு நிலையம், யாழ்ப்பாணம் ஆகியவற்றின் உரிமையாளர் பாலசுப்பிரமணியத்தின் சகோதரரும், பரமேஸ்வரியின் மைத்துனரும், கதிராசிப்பிள்ளை, காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் மூளாந்திரம் திரு, திரு தி சங்கரப்பிள்ளை, திரு. திருமதி ஆறுமுகம் ஆகியோரின் பெருமகனும் ஆவார். அன்னாரின் தகனக்கிரிகைகள் இன்று (5-5-80) காலை 9 மணிக்கு காரைநகர் தில்லை மயானத்தில் நடைபெறும்.

உற்றாரும், உறவினரும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

5668


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Ceneral Post office Sri Lanka uuder No CE/8948/ 78. The Eelanaadu, Post Box No 49, Telegram: "Eelanaadu, Phone: 389


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org